
# வரை
Varai

Mar, 2011 அறிவோம் ஆயிரம் 15



அறிவோம் ஆயிரம்

# வரை

**அறிவியல் பல்சுவை மாசிகை**

*தமிழ் எங்கள் இளமைக்கு பால்! - இன்பத்*
*தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்!*
*தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! - இன்பத்*
*தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!*
*தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! - இன்பத்*
*தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!*
*தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்! - இன்பத்*
*தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ!*

***-பாரதிதாசன்***



## உள்ளே...


| | |
|---|---|
| எதுவரை..? (தொடர் கட்டுரை) | 03 |
| தமிழ் வட்டம் | 05 |
| சஞ்சீவி பர்வதத்தின் சாரல் (தொடர்) | 06 |
| வெறுப்புணர்ச்சி வேண்டாமே.. | 09 |
| A Brown Dog | 11 |
| Let's Learn to speak in English | 17 |
| Bussiness Letters | 21 |
| பல்பயன் தரு(ம்) மரங்கள் தேத்தா | 23 |
| நயாகரா நீர்வீழ்ச்சி | 27 |
| உடலைக் காக்கும் ஒமேகா -3 கொழுப்பு | 29 |
| பூச்சு - சிறுகதை | 35 |
| நயாகரா - வைரமுத்து | 38 |
| கனடாவில் பெண் வாழ்க்கை | 43 |


## சின்னஞ்சிறு தகவல்கள்

- எகிப்தில் வெள்ளைத் தங்கம் என்று அழைக்கப்படுவது பருத்தி.
- உலக வாணிப நிறுவனத்தின் (WTO) தலைமையகம் அமைந்திருப்பது ஜெனிவாவில்.
- இந்திய சுதந்திரத்திற்கு புரட்சிப்பாதையில் போராடியவர் சுபாஸ் சந்திரபோஸ். அதற்காக அவர் தொடங்கியதுதான் இந்தியன் நஷனல் ஆமி (Indian National Army).
- ஐன்டீனின் Theory of Relativity மிகப் பிரபலமானது. யூதரான அவர் பிறந்த நாடு ஜெர்மனியாக இருந்தாலும் யூதர்களின் எதிரியான கிட்லருக்குப் பயந்து நாட்டைவிட்டு வெளியேறினார். அவரது ஆராட்சிகள் அமெரிக்காவிலேயே நடைபெற்றன.
- இங்கிலாந்து நாட்டை ஆண்டவர்களில் ஜேன் கிரே (Jane Grey) என்பவர் வெறும் ஒன்பது நாட்களே அந்த நாட்டுக்கு ராணியாக இருந்தார்.
- உலகில் அதிகமாக திரைப்படங்கள் தயாரிக்கும் நாடு இந்தியா.
- பிரபல கிரிகெட் ஆட்டக்காரரான கபில்தேவின் சுயசரிதையின் பெயர் By Gods-decree. இதன் பொருள் கடவுளின் தீர்ப்புப்படி.

# சிந்திய குறள்கள்



**மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய**
**பிறத்த லதனான் வரும்**

**விளக்கவுரை**

யார்மாட்டும் - எவரிடத்திலும், வெகுளியை மறத்தல் - கோபத்தை மறந்து விட வேண்டும். தீய பிறத்தல் அதனால் வரும் - அதனால் தீமையுடையவை எல்லாம் வரும்.

**கருத்துரை**

கோபத்தைச் செய்வதனால் (கோபம் கொள்வதால்) பல துன்பங்கள் நேருமாதலால், அதனை வலியார், மெலியார், ஒப்பார் (தனக்குச் சமமானவர்) என்னும் எவரிடமும் செய்யாமல் இருப்பது நன்று.

Great harm may be caused by anger. Therefore one should restrain anger towards anybody.

-இரா வண்ணன்

# பொன்மொழி

*வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான மூன்று வழிகள்:*

1. *பிறரைவிட அதிகமாக அறிந்து கொள்ளுங்கள்*
2. *பிறரைவிட அதிகமாக உழைக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.*
3. *பிறரைவிட குறைவாக பிறரிடமிருந்து பெற முயலுங்கள்.*

-வில்லியம் சேக்ஸ்பியர்





15

# எதுவரை?

*அன்பிற்கினிய இளைய தலைமுறையினரே...*

*சென்ற மடலில் இளம் யுவதிகளின் ஆரோக்கிய வாழ்விற்கான ஆலோசனைகள் சிலவற்றை வழங்கியிருந்தேன். இன்று அதன் தொடராக விட்டகுறை பற்றித் தொட்டுச் செல்லலாம் என நினைக்கிறேன். பெண்ணே! சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகின்ற இந்த வேளையிலே உனது சுதந்திரமான பயணத்திற்கு எழும் சவால்கள் பற்றி சென்ற மடலின் இறுதிப் பகுதியில் கலந்துரையாடினேன் அல்லவா? அதன் தொடரை இப்போது பார்க்கலாமா? உனது இக்கட்டான நிலைகளும் அவற்றை நீ கடக்கின்ற போது நீ எதிர்கொள்ளும் சவால்களும் என்னும் விடயத்தை நோக்கும் போது... நீ பலம் குன்றிய நிலையில் எடுக்கின்ற தீர்மானங்கள் நிச்சயமாக அறிவுபூர்வமாக இருப்பதில்லை. இருக்கவும் முடியாது என்று நான் கூறுகின்றேன். நீ அதனை ஏற்றுக்கொள்கின்றாயா? நெருக்கடி நிலைகளில் நீ சிக்கித் தவிக்கின்ற போது நீ விடும் தவறு என்ன தெரியுமா? உனது நிராதரவான நிலைபற்றி உன் பெற்றோருக்கே நீ நேர்மை இல்லாது நடந்து கொள்வதுதான். உதாரணமாக ஒரு சம்பவம் பற்றி உன்னுடன் பகிரலாம் என எண்ணுகின்றேன்.*

*நெடு நாட்களாக ஒரு மாணவியின் பயணத்தில் சில இடையூறுகள் தொடர்கின்றன. பாவம் பெண் அல்லவா? அவள் அது பற்றிக் கூடியவகையில் மறைத்து, ஒதுங்கி விலகி நடந்து கொண்டிருந்தாள். பெற்றவர்களிடம் இதைக்கூறினால் அவர்கள் பகிரங்கமாக முரண்பட்டு ஏடாகூடமாகிவிடும். ஆனால் பயணங்களையும் நிறுத்த முடியவில்லை. தீர்மானமெடுக்க முடியாது அவள் திணறுகிறாள். நண்பிகள் பல விதமாக ஆலோசனை வழங்குகிறார்கள். அவளிடம் தன்னம்பிக்கை குறைகிறது. பயம் அதிகரித்துக்கொண்டு செல்கின்றது. அவளது அமைதி குலைகிறது. அவள் ஒரு புரியாத புதிராகி மூலையில் ஒதுங்கி ஒடுங்கிச் சுருண்டு விடுகிறாள். ஆம் ஒரு வண்ணத்துப் பூச்சி கூட்டுப் புழுவாகி உறங்கு நிலை அடைந்து விட்டது...*

*ஓ! ஒரு அற்புதமான கல்லூரிப் பயணம் இப்படியா அரைகுறையாக முடிந்துவிடுவது? எங்கே தவறு நடந்தது? ஆம்! இதனை யாருமே கண்டுகொள்ளவில்லை. இந்தப் பிரச்சினை ஆரம்பித்தவுடனேயே ஏன்*

அவள் விழிப்படையவில்லை. ஏன் அவள் அதனைத் தன்னைப் பெற்றவர்களிடம் வெளியிடவில்லை. ஆம் பெற்றவர்கள் பிள்ளைகளுடன் அன்பாகவும் கரிசனையாகவும் இருக்கிறார்கள்தான். ஆனால் நம்பிக்கையோடு ஆழ்ந்த நட்புரிமையோடு இந்தக் கட்டிளமைப் பருவத்து இளைஞர் யுவதிகளோடு நடப்பது மிகமிகக் குறைவு. எதையும் தைரியமாகப் பெற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு ஏன் தயங்குகிறார்கள் தெரியுமா? அவர்கள் நடந்து கொள்ளும் முறைமை. வலுச் சண்டைக்கு, அவமதிப்பிற்கு உள்ளாக்கும் விதமாகப் பிரச்சினையைப் பெரிதுபடுத்தும் பெற்றவர்கள் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தையே மறந்துபோய் விடுகிறார்கள். இத்தகைய முற்கற்பிதங்களே பிள்ளைகளையும் பெற்றவர்களையும் தூரவிலக்கி விடுகின்றன.

பொதுவாகப் பெற்றோரை மூன்று வகையாகப் பிரிக்கலாம். இளைஞர்களை எதிரிகளாக்கிப் பலர் முன்னிலையில் நையப்புடைக்கும் பெற்றவர்கள் முதலாவது வகை. தமது பெண் பிள்ளைகளை அடக்கி மூலையில் உட்காரவைத்துவிடும் பெற்றவர்கள் இரண்டாவது வகை. பிள்ளை மேல் பூரண நம்பிக்கையோடு கவனித்து வளர்க்கும் பெற்றவர்கள் மூன்றாவது வகை! அன்பான இளையவர்களே உங்கள் பெற்றோர் இவற்றில் எந்த வகை? விடையுடன் காத்திருங்கள் விளக்கத்துடன் வருகிறேன் . அதுவரை விடைபெறும்...

பகீரதி கணேசதுரை
**ஆசிரியை, யா/ மகாஜனக் கல்லூரி**

***(விமர்சனங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்)***



- சிரிப்பை உண்டுபண்டும் சக்தி எங்கே இருக்கிறதோ அங்கே அழுகையை உண்டாக்கும் சக்தியும் மறைந்திருக்கிறது.
- நாம் இன்பமாக இருப்பதற்கு ஒரே வழி துன்பத்தை குறைப்பதற்கு பாடுபடுவதே.
- கனவுகளையும் மணல் வீடுகட்டுவதையும் விட்டுவிட்டு நாம் விழித்துக் கொள்ளும் வரையில் நன்மை, தீமை ஆகிய இரண்டு சக்திகளும் பிரபஞ்சத்தை நமக்காக இயக்கிக் கொண்டிருக்கும்.
- தனிப் பொருளும் எல்லையற்றதுமான ஒன்று எல்லைக்கு உட்படும் போதுதான் பிரபஞ்சமாக வெளிப்பட முடியும்.
- இந்த உலகம் தன்போக்கில் தான் போகும் என்று தெரிந்து கொள்வதால் நம்மிடம் பொறுமை வரும்.
- போதிய ஆர்வமும் ஈடுபாடும் இருக்குமானால் அடைய முடியாதது எதுவும் இல்லை

***சுவாமி விவேகானந்தர்***





**தமிழ் வட்டம்**

*திரு. சு. ஆழ்வாப்பிள்ளை*


## இரு தமிழ் அறிஞர்கள் சந்திப்பு

பண்டிதமணி கணபதிப்பிள்ளை என்றால் தெரியாதவர்கள் இல்லை. அதே போல தமிழ்த்தாத்தா கந்தமுருகேசன் என்றாலும் தெரியாதவர்கள் தமிழுலகில் இல்லை.

ஒரு நாள் காலை எட்டுமணியளவில் திரு. பண்டிதமணியவர்கள் தமிழ்த் தாத்தா கந்த முருகேசனாரைப் பார்ப்பதற்காக வந்தார். பண்டிதமணியவர்கள் வந்த போது கந்தமுருகேசனார் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். வந்த பண்டிதமணி அவர்கள் “ஐயா சாப்பிட்டுக் கொண்டிருக்கிறீர்கள்” என்று சொன்னார். “ஆமாம் ஐயா, பழஞ்சோறு சாப்பிடுகிறேன்” என்றார் கந்தமுருகேசன். பண்டிதமணி அவர்கள் திண்ணையில் உட்காரும்போதே “என்னையா உம்மைத் தொகையா” என்று கேட்டார். “பண்புத் தொகைதான். உம்மைத்தொகைக்கு தற்போது வசதியுமில்லை” என்று சிரித்தார். எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

பழஞ்சோறு - பழம் + சோறு - பழமும் சோறும் - உம்மைத்தொகை

பழஞ்சோறு - பழையதாகிய சோறு - பண்புத் தொகை



“அம்மா, நான் வெளியில ஒருக்கா போட்டு வாறன்”

“பார்த்துப் பழகு பிள்ளை, எந்த புத்துக்க எந்த பாம்பிருக்குமெண்டு சொல்லேலாது”

# சஞ்சீவி பர்வதத்தின் சாரல்

3

திரு. சு. ஆழ்வாப்பிள்ளை






பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் குப்பன் என்ற வேடுவனையும் அவனது காதலியையும கதாபாத்திரங்களாக வைத்து தமிழ் நாட்டில் கறையாக படிந்திருக்கும் மூடக்கொள்கையை படம் பிடித்து சுவையாக தரும் இலக்கியத்தைத் தழுவியே இவை எழுதப்பட்டது.

குப்பனும் வஞ்சியும் இருக்கும் போது தமிழ் மொழியில் பேசும் குரல் கேட்டது. என்ன அதிசயம் என்று இருவரும் நோக்கினர்.

“இதோ! ஒரு சில நொடிகளுக்குள் நீ போய் சஞ்சீவி





பர்வதத்தை வேரோடு பெயர்த்து வரவேண்டும்” இதைக் கேட்ட இருவருள்ளும் குப்பன் மிகப் பயந்து விட்டான். கோதை இளவஞ்சியை நோக்கினான். கோதை குப்பனைப் பார்த்து நகைத்துவிட்டாள். “என்ன மணாளரே சஞ்சீவி பர்வதத்தை வேரோடு பெயர்ப்பதென்பது சாதாரண காரியமா? சஞ்சீவி பர்வதத்தை தாவி பெயர்க்கும் மனிதருமில்லை; மலையும் அசையாது. வஞ்சி அப்படி சொல்லித் தீருமுன் “உங்களுக்கு இராமனின் அருள் நல்லாய் இருக்கிறது. வானமளவுக்கு வளரக்கூடிய உடலும் இருக்கிறது. ஏன் இங்கு நிற்கிறீர்? தாமதம் வேண்டாம். சஞ்சீவி மலையை பெயர்த்து வருவீர்” என்ற இந்த சத்தம் இருவர் செவியிலும் விழுந்தவுடன் “குன்று பெயர்வது கொஞ்சமும் பொய்யல்ல. அனுமன் அருள் வாய்ந்தவனாம். வானைத் தொடும் அளவுக்கு வளர்வானாம். அப்படிப்பட்டவனை இந்த சஞ்சீவி மலைதன்னை எடுத்துவரும்படி அந்த மனிதன் அங்கே ஆணையிடுகிறான். அப்படியானவன் நாலடியிலேயே நடந்து வந்து நாங்கள் மலையில் இருக்கும் போதே அவன் தூக்கிவிடுவான். புத்திசாலித்தனமாக அவன் நாங்கள் நிற்கும் இந்த சஞ்சீவி மலையைப் பெயர்க்கும் முன் நாம் இந்த மலையின் சாரலை கடந்து விடுவோம். அப்படி என்றால் பாதுகாப்பாக இருக்கும்” என்றான் குப்பன்.

“இராமன் எங்கே? இராமன் அருள் எங்கே? சஞ்சீவி மலையை தூக்கும் வல்லமை எங்கே? இது உண்மையா? உண்மையாக இருந்தால் நாங்கள் எல்லோரும் அடிமையாக வாழ்ந்திருப்போம்” என்று நகைத்தாள் அந்த வஞ்சி. “ஓம் ராம், ஓம் ராம்” “சஞ்சீவி மலையை ஒரு சில நொடிகளில் தூக்கி உம் எதிரில் வைக்கிறேன்.” என்று இன்னொரு குரல் கேட்டது. குப்பன் உடலறுந்து போனது போல பதைபதைத்தான் “ஐயோ! நாங்கள் இருவரும் எப்படி தப்பிப் பிழைக்கப்போகிறோம். பஞ்சு மூட்டையைத் தூக்குவது போல அந்த பாவி எவனோ நாம் நிற்கும் சஞ்சீவி மலையை தூக்குகிறானே. சந்தோசமாக வாழ்வதற்கு சஞ்சீவி பர்வதத்தின் சாரலுக்கு நாமிருவரும் வந்தோம். பதிலாக சாக்காடு வந்துவிட்டது. நம்பு என்று நான் சொன்னவற்றையெல்லாம் நம்பாமல் வம்பு செய்தாய். மலையும் அதிர்கிறது. முத்தம் கொடுத்து முழுநேரத்தையும் தொலைத்துவிட்டாய். செத்து மடியும் போது முத்தும் ஒரு கேடா. என்னுடைய உயிருக்கே நீ இயமனாக வந்து விட்டாய். உந்தன் உயிரைத்தான் காப்பாற்றிக் கொண்டாயா? ஐயோ மலையைத்

தூக்கிவிட்டான்! தூக்கிவிட்டான்! தூக்கிச் சென்று, தூள் தூளாக்கி அப்படியே சமுத்திரத்தில் போட்டு விடுவான். எப்படித்தான் நாம் பிழைப்போம். எடி! இதற்கு நீதான் நன்றாக யோசித்து ஒரு மார்க்கம் சொல்லமாட்டாயா?" என்று பதைபதைத்து குப்பன் துடிக்கும் போது நகைத்துக்கொண்டே இளவஞ்சி கையால் குப்பனை அணைத்து "இந்த உலகம் உண்டாகி எவ்வளவு நாட்கள் இருக்கும்? இந்த மலை உண்டான நாள் தொடக்கம் இன்றுவரை இந்த மலையைத் தூக்கும் மனிதர்கள் இருந்ததில்லை. இன்னும் சொன்னால் மண்ணுலகம் மறைந்தொழியும் காலம் மட்டும் அதன் பின்பும் மனிதர்கள் பிறப்பதில்லை. அவ்வாறே ஒரு மனிதன் ஆகாயம் பூமி மட்டும் எவ்வாறு நீண்டு வளரமுடியும்? மகிழ்ச்சியாக இருங்கள். உள்ளத்தை எங்கள் உள்ளக் காதலுக்காக சமர்ப்பணம் செய்யுங்கள்."

"இந்த நேரம் சஞ்சீவி மலைப் பக்கம் (அனுமன்) போயிருப்பார். இந்த நேரம் மலையை பெயர்த்தெடுப்பார். இந்த நேரம் மேகத்தில் ஏறி பறந்திடுவார். உஷ் என்று கேட்குது பார் ஒரு சந்தம். வானத்தில் விஸ்வரூபம் கொண்டு மேலேறி பாய்கிறார் அவர் (அனுமன்)." இப்படியே பேச்சுக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறது. இப்பேச்சை கேட்டு "ஐயோ" என உரைத்தான் குப்பன். அம்மட்டும் சொல்லத்தான் குப்பனால் முடிந்தது. உண்மையை எல்லாம் அறிந்த வஞ்சி "மச்சான் மனதைவிட்டு ஏங்காதீர்கள். இனிமேலும் காதில் விழப்போவதைக் கேளுங்கள்" என்று சிரித்துக்கொண்டு உரைத்தாள் சீரழகி இளவஞ்சி. "இப்படியாகவே எழும்பிப்போய் அப்போது ஜாம்பவந்தன் ஆராய்ந்து சொன்னது போல அனுமன் சஞ்சீவி பர்வதத்தை தாவிப் பறந்துமே கொஞ்ச நேரத்தில் இலங்கையில் கொண்டுவந்து வைத்தான். உடனே மலையில் உள்ள மூலிகையின் சக்தியால் இறந்த இராமனும் இலட்சுமணனும் எழுந்தார்கள். என்று அந்த வழிக்குரல் வந்தது. இதை உற்று கேட்டுக்கொண்டிருந்த குப்பன் "ஓகோ! மலையதுதான் சற்றும் அசையாமல்தான் தூக்கிப்போனாரோ? இலங்கையிலே வைத்தானோ இந்த மலையை? இலங்கையில் நாம் தப்போமோ? குப்பனுக்கு நடுக்கம் இன்னும் இதயத்தில் நீங்கவில்லை. "இன்னும் பொறுங்கள்" என்றுரைத்தாள் இளவஞ்சி.

"பாரமிகு சஞ்சீவி பர்வத மலையை அனுமன் சஞ்சீவி மலை இருந்த இடத்திற்கு தூக்கிச் சென்று வைத்துவிட்டு வந்தார். மறுகணம்






ஆகு முன்பே மூர்சையான இராமன் இலக்குவணன் ஆகியோருக்கு உயிர் கொடுத்தாயிற்று. அனுமன் இராமனை தெண்டனிட்டு வணங்கினார்." இதைக்கேட்ட குப்பன் கிளுக்கென்றுதான் நகைத்தான்.

"அப்போதே நான் நினைத்தேன். ஆபத்து ஒன்றும் இருக்காதென்று. நான் நினைத்த மாதிரியே நடந்ததுதான் ஆச்சரியம். என்னடி வஞ்சி இனிப்பயமொன்றும் இல்லைத்தானே" என்றான். ஆனாலும் இன்னும் அரை நிமிசம் காத்திருங்கள் நான் உம்மையொரு சந்தேகம் கேட்கப்போகிறேன். அதற்கு நீங்கள் தக்க விடையளிக்க வேண்டும். "நாம் இந்த மலையில் ஏறிய பின்னர் நடந்த ஆச்சரிய சம்பவம் தான் என்ன?" என்றாள்.

தொடரும்...

# வெறுப்புணர்ச்சி வேண்டாமே!



அரிவரி வகுப்பு என்று சொல்லப்படும் வகுப்பில் இருந்த பிள்ளைகள் நன்றாகத்தான் படித்தார்கள். ஆனால் அப்பிள்ளைகள் ஏனோ தெரியவில்லை, காரணமில்லாமலே வகுப்பிலுள்ள சில பிள்ளைகளை வெறுப்புடன் பார்த்தும் பேசியும் வந்தார்கள். ஆசிரியை மிகவும் திறமையானவர். இதனைப் போக்க ஒரு சிறு விளையாட்டை (?) ஒருநாள் அறிமுகப்படுத்தினார் வகுப்பு ஆசிரியை. அதன்படி, அந்தப்பிள்ளைகளை அடுத்தநாள் வரும்போது ஒரு பிளாஸ்டிக் பையில் உருளைக் கிழங்குகளை வைத்துக் கொண்டுவருமாறு கூறிவிட்டு ஒவ்வொருவரும் தாங்கள் எத்தனை பேரை வெறுக்கிறார்கள் என்பதற்கேற்ப அந்தந்த எண்ணிக்கைகளில் உருளைக் கிழங்குகளின் எண்ணிக்கை இருக்கவேண்டும் என்றும் சொன்னார்.

அப்படியே அடுத்தநாள் பிள்ளைகளும் கொண்டுவந்தார்கள். சிலர் ஒரு உருளைக்கிழங்கையும் வேறு சிலர் இரண்டு, மூன்று என்றும் வைத்துக்கொண்டு வந்தார்கள். சிலரோ ஐந்து கிழங்குகளைக் கொண்டு வந்திருந்தார்கள். இவற்றைப் பார்த்த பின்னர் அந்த ஆசிரியை

பிள்ளைகளைப் பார்த்து கிழங்குகளோடு அந்தப் பைகளை அவர்கள் எந்தநேரமும் எங்கும் (உறங்குவது, குளிப்பு, மலசலகூட இடங்கள் உட்பட) கைவிடாமல் தம்முடனேயே கொண்டு திரியும்படியும், அந்தமாதிரியாக ஒரு கிழமைக்குச் செய்யும்படியும் கூறிவிட்டார்.

நாட்கள் நகர்ந்தன. பிள்ளைகள் அழுகும் கிழங்கிலிருந்து வரும் துர்நாற்றம் பற்றி சிரமமும் அருவருப்பும் அடைந்தபடியே இருந்தார்கள். ஒரு கிழங்கு வைத்திருந்தவர்களுக்கே சங்கடமாக இருந்ததெனில் மூன்று, ஐந்து என இருந்தவர்கள் அதிக பாரத்தைத் தூக்கித் திரியவேண்டி இருந்ததுடன் அதிக துர்நாற்றத்தையும் சகிக்கவேண்டியிருந்தது. "எப்படா இது முடியும்?" என ஏங்கியபோது ஒருவாரம் முடிந்தது. அப்பாடா ஒரு வகையாக இந்த விளையாட்டும் முடிந்தது.

இந்நிலையில் ஆசிரியை அப்பிள்ளைகளிடம் "ஒரு வாரத்திற்குக் கிழங்குகளைக் காவித்திரிந்தது எப்படி இருந்தது" எனக் கேட்டார்.
பிள்ளைகளும் வீசிய துர்நாற்றம், ஒரு வாரமாக தூக்கித்திரிந்த அவற்றின் கனம் போன்றவற்றைப் பற்றிக் கூறித் தாம்பட்ட கஷ்டங்களை முறையிட்டுப் புலம்பினார்கள்.

மனதுக்குள் சிரித்துக்கொண்டே ஆசிரியை அந்த விளையாட்டின் உள்ளர்த்தத்தைக் கூறும்போது, "பிள்ளைகளே, இதே போன்ற நிலைதான் நீங்கள் மற்றவர்கள் மீது கொண்டுள்ள வெறுப்புணர்ச்சியின் நிலையுமாகும். நீங்கள் ஒருவரில் கொண்டிருக்கும் வெறுப்புணர்ச்சி என்னும் துர்நாற்றம் உங்கள் இதயத்தில் ஒரு தொற்று நோய் போல் ஒரு உணர்வை ஏற்படுத்திவிடும். இந்த அழுகிய கிழங்குகளின் துர்நாற்றத்தை நீங்கள் ஒரு வார காலத்திற்கே தாங்க முடியாது இருக்கிறீர்கள். அப்படியானால் வாழ்நாள் முழுவதும் ஒருவரை வெறுக்கும் அந்தத் துர்நாற்றத்தை உங்களால் கற்பனை செய்து பார்க்கவும் முடியுமா?" என்றார்.

இக்கதையிலிருக்கும் கருத்து. எவர்மேலும் கொண்டுள்ள வெறுப்பை அகற்றிவிடுங்கள் அப்படிச் செய்யின் வாழ்நாள் முழுவதும் தேவையற்ற துன்பத்தை நீங்கள் மனதில் கொண்டிருக்க மாட்டீர்கள் என்பதாகும்.

மன்னித்து மறப்பது என்பது உயர்ந்த ஒரு குணம்.

அன்புள்ளம் என்பது பூரணமாக நல்ல மனிதரை நேசிப்பது என்பதல்ல, ஆனால் குறையுள்ளவரையும் நேசிப்பதே குறைவற்ற அன்பாகும்.

நன்றி: றீடேர்ஸ் டைஜெஸ்ட்.

***

*சதாசர்மா*

திருநெல்வேலி.





Short Story

# A Dark Brown Dog

## By Stephen Crane



A child was standing on a street-corner. He leaned with one shoulder against a high board-fence and swayed the other to and fro, the while kicking carelessly at the gravel.

Sunshine beat upon the cobbles, and a lazy summer wind raised yellow dust which trailed in clouds down the avenue. Clattering trucks moved with indistinctness through it. The child stood dreamily gazing.

After a time, a little dark-brown dog came trotting with an intent air down the sidewalk. A short rope was dragging from his neck. Occasionally he trod upon the end of it and stumbled.

He stopped opposite the child, and the two regarded each other. The dog hesitated for a moment, but presently he made some little advances with his tail. The child put out his hand and called him. In an apologetic



manner the dog came close, and the two had an interchange of friendly pattings and waggles. The dog became more enthusiastic with each moment of the interview, until with his gleeful caperings he threatened to overturn the child. Whereupon the child lifted his hand and struck the dog a blow upon the head.

This thing seemed to overpower and astonish the little dark-brown dog, and wounded him to the heart. He sank down in despair at the child's feet. When the blow was repeated, together with an admonition in childish sentences, he turned over upon his back, and held his paws in a peculiar manner. At the same time with his ears and his eyes he offered a small prayer to the child.

He looked so comical on his

back, and holding his paws peculiarly, that the child was greatly amused and gave him little taps repeatedly, to keep him so. But the little dark-brown dog took this chastisement in the most serious way, and no doubt considered that he had committed some grave crime, for he wriggled contritely and showed his repentance in every way that was in his power. He pleaded with the child and petitioned him, and offered more prayers.

At last the child grew weary of this amusement and turned toward home. The dog was praying at the time. He lay on his back and turned his eyes upon the retreating form.

Presently he struggled to his feet and started after the child. The latter wandered in a perfunctory way toward his home, stopping at times to investigate various matters. During one of these pauses he discovered the little dark-brown dog who was following him with the air of a footpad.

The child beat his pursuer with a small stick he had found. The dog lay down and prayed until the child had finished, and resumed his journey. Then he scrambled erect and took up the pursuit again.

On the way to his home the child turned many times and beat the dog, proclaiming with childish gestures that he held him in contempt as an unimportant dog, with no value save for a moment. For being this quality of animal the dog apologized and eloquently expressed regret, but he continued stealthily to follow the child. His manner grew so very guilty that he slunk like an assassin.

When the child reached his door-step, the dog was industriously ambling a few yards in the rear. He became so agitated with shame when he again confronted the child that he forgot the dragging rope. He tripped upon it and fell forward.

The child sat down on the step and the two had another interview. During it the dog greatly exerted himself to please the child. He performed a few gambols with such abandon that the child suddenly saw him to be a valuable thing. He made a swift, avaricious charge and seized the rope.

He dragged his captive into a hall and up many long stairways in a dark tenement. The dog made willing efforts, but he could not hobble very skilfully up the stairs because he was very small and soft, and at last the pace of the engrossed





child grew so energetic that the dog became panic-stricken. In his mind he was being dragged toward a grim unknown. His eyes grew wild with the terror of it. He began to wiggle his head frantically and to brace his legs.

The child redoubled his exertions. They had a battle on the stairs. The child was victorious because he was completely absorbed in his purpose, and because the dog was very small. He dragged his acquirement to the door of his home, and finally with triumph across the threshold.

No one was in. The child sat down on the floor and made overtures to the dog. These the dog instantly accepted. He beamed with affection upon his new friend. In a short time they were firm and abiding comrades.

When the child's family appeared, they made a great row. The dog was examined and commented upon and called names. Scorn was leveled at him from all eyes, so that he became much embarrassed and drooped like a scorched plant. But the child went sturdily to the center of the floor, and, at the top of his voice, championed the dog. It happened that he was roaring protestations, with his arms clasped about the dog's neck, when the father of the family came in from work.

The parent demanded to know what the blazes they were making the kid howl for. It was explained in many words that the infernal kid wanted to introduce a disreputable dog into the family.

A family council was held. On this depended the dog's fate, but he in no way heeded, being busily engaged in chewing the end of the child's dress.

The affair was quickly ended. The father of the family, it appears, was in a particularly savage temper that evening, and when he perceived that it would amaze and anger everybody if such a dog were allowed to remain, he decided that it should be so. The child, crying softly, took his friend off to a retired part of the room to hobnob with him, while the father quelled a fierce rebellion of his wife. So it came to pass that the dog was a member of the household.

He and the child were associated together at all times save when the child slept. The child became a guardian and a friend. If the large folk kicked the dog and threw things at him, the child made loud and violent objections. Once when

the child had run, protesting loudly, with tears raining down his face and his arms outstretched, to protect his friend, he had been struck in the head with a very large saucepan from the hand of his father, enraged at some seeming lack of courtesy in the dog. Ever after, the family were careful how they threw things at the dog. Moreover, the latter grew very skilful in avoiding missiles and feet. In a small room containing a stove, a table, a bureau and some chairs, he would display strategic ability of a high order, dodging, feinting and scuttling about among the furniture. He could force three or four people armed with brooms, sticks and handfuls of coal, to use all their ingenuity to get in a blow. And even when they did, it was seldom that they could do him a serious injury or leave any imprint.

But when the child was present, these scenes did not occur. It came to be recognized that if the dog was molested, the child would burst into sobs, and as the child, when started, was very riotous and practically unquenchable, the dog had therein a safeguard.

However, the child could not always be near. At night, when he was asleep, his dark-brown friend would raise from some black corner a wild, wailful cry, a song of infinite lowliness and despair, that would go shuddering and sobbing among the buildings of the block and cause people to swear. At these times the singer would often be chased all over the kitchen and hit with a great variety of articles.

Sometimes, too, the child himself used to beat the dog, although it is not known that he ever had what could be truly called a just cause. The dog always accepted these thrashings with an air of admitted guilt. He was too much of a dog to try to look to be a martyr or to plot revenge. He received the blows with deep humility, and furthermore he forgave his friend the moment the child had finished, and was ready to caress the child's hand with his little red tongue.

When misfortune came upon the child, and his troubles overwhelmed him, he would often crawl under the table and lay his small distressed head on the dog's back. The dog was ever sympathetic. It is not to be supposed that at such times he took occasion to refer to the unjust beatings his friend, when provoked, had administered to him.

He did not achieve any notable degree of intimacy with the other members of the family. He had no





confidence in them, and the fear that he would express at their casual approach often exasperated them exceedingly. They used to gain a certain satisfaction in underfeeding him, but finally his friend the child grew to watch the matter with some care, and when he forgot it, the dog was often successful in secret for himself.

So the dog prospered. He developed a large bark, which came wondrously from such a small rug of a dog. He ceased to howl persistently at night. Sometimes, indeed, in his sleep, he would utter little yells, as from pain, but that occurred, no doubt, when in his dreams he encountered huge flaming dogs who threatened him direfully.

His devotion to the child grew until it was a sublime thing. He wagged at his approach; he sank down in despair at his departure. He could detect the sound of the child's step among all the noises of the neighborhood. It was like a calling voice to him.

The scene of their companionship was a kingdom governed by this terrible potentate, the child; but neither criticism nor rebellion ever lived for an instant in the heart of the one subject. Down in the mystic, hidden fields of his little dog-soul bloomed flowers of love and fidelity and perfect faith.

The child was in the habit of going on many expeditions to observe strange things in the vicinity. On these occasions his friend usually jogged aimfully along behind. Perhaps, though, he went ahead. This necessitated his turning around every quarter-minute to make sure the child was coming. He was filled with a large idea of the importance of these journeys. He would carry himself with such an air! He was proud to be the retainer of so great a monarch.

One day, however, the father of the family got quite exceptionally drunk. He came home and held carnival with the cooking utensils, the furniture and his wife. He was in the midst of this recreation when the child, followed by the dark-brown dog, entered the room. They were returning from their voyages.

The child's practised eye instantly noted his father's state. He dived under the table, where experience had taught him was a rather safe place. The dog, lacking skill in such matters, was, of course, unaware of the true condition of affairs. He looked with interested eyes at his friend's sudden dive. He interpreted it to mean: Joyous

gambol. He started to patter across the floor to join him. He was the picture of a little dark-brown dog en route to a friend.

The head of the family saw him at this moment. He gave a huge howl of joy, and knocked the dog down with a heavy coffee-pot. The dog, yelling in supreme astonishment and fear, writhed to his feet and ran for cover. The man kicked out with a ponderous foot. It caused the dog to swerve as if caught in a tide. A second blow of the coffee-pot laid him upon the floor.

Here the child, uttering loud cries, came valiantly forth like a knight. The father of the family paid no attention to these calls of the child, but advanced with glee upon the dog. Upon being knocked down twice in swift succession, the latter apparently gave up all hope of escape. He rolled over on his back and held his paws in a peculiar manner. At the same time with his eyes and his ears he offered up a small prayer.

But the father was in a mood for having fun, and it occurred to him that it would be a fine thing to throw the dog out of the window. So he reached down and grabbing the animal by a leg, lifted him, squirming, up. He swung him two or three times hilariously about his head, and then flung him with great accuracy through the window.

The soaring dog created a surprise in the block. A woman watering plants in an opposite window gave an involuntary shout and dropped a flower-pot. A man in another window leaned perilously out to watch the flight of the dog. A woman, who had been hanging out clothes in a yard, began to caper wildly. Her mouth was filled with clothes-pins, but her arms gave vent to a sort of exclamation. In appearance she was like a gagged prisoner. Children ran whooping.

The dark-brown body crashed in a heap on the roof of a shed five stories below. From thence it rolled to the pavement of an alleyway.

The child in the room far above burst into a long, dirgelike cry, and toddled hastily out of the room. It took him a long time to reach the alley, because his size compelled him to go downstairs backward, one step at a time, and holding with both hands to the step above.

When they came for him later, they found him seated by the body of his dark-brown friend.

❖❖❖





# LET'S LEARN TO SPEAK IN ENGLISH

## ஆங்கிலத்தில் பேசப் பழகுவோம் தொடர். 11



*Series. 11*

மாதமொரு உரையாடல்

## A Monthly Conversation

**By:** **Professor A.V. Manivasagar, Ph.D.**
**Head/Dept. of Political Science**
**University of Jaffna**

### AT THE POST OFFICE

**In this lesson Miss.Mathura goes to the post office for purchasing postal stamps as well as sending a letter by registered post.**

**Mathura:** Where can I purchase the postal stamps?

**Enquiry clerk:** At counter No.4 please.

**Mathura:** Could you please weigh this registered letter and tell me the value of the stamps which I should affix on it?

**Enquiry clerk:** (Weighs the letter) Please affix stamps worth Rs. 30/- on this letter

**Mathura:** Please also tell me where is the registration counter?

**Enquiry clerk:** It is at counter No. 2.

**Mathura:** Thank you, please. (Mathura goes to counter No.4)

**Mathura:** Is this the counter for buying postal stamps?

**A By stander:** Yes please.

**Mathura:** Thank you.

**The By stander:** No mention please.



**Mathura:** (To the stamp vendor) I want two stamp envelops and an air mail cover, please.

**Stamp Vendor:** Anything else do you want?

**Mathura:** I also want postal stamps worth Rs. 30/- for registration purpose.

**Stamp Vendor:** O.K. Please give me the money.

**Mathura:** Here is a hundred rupee note. Please return me the balance.

**Stamp Vendor:** Here are your two stamp envelops, an air mail cover and the stamps worth Rs. 30/-. Here is your balance.

**Mathura:** Thank you please. (She affixes the stamps on the registered letter and then she goes to the counter No.2)

**Mathura:** (To the registration clerk) I want to get this letter registered.

**Clerk:** Please give me the letter.

**Mathura:** Have it please.





**Clerk:** Have you got it weighed please?

**Mathura:** Yes, please.

**Clerk:** Stamps of how much value have you affixed?

**Mathura:** I have affixed stamps worth Rs. 30/-.

**Clerk:** (After weighing the letter on the scales) It's all right please. But have you written your address on the envelop?

**Mathura:** I am sorry. I forgot to write it.

**Clerk:** Please write it now.

**Mathura:** I shall write it in a minute. (She returns the letter after writing her address) Here it is please.

**Clerk:** Now it's all right. Here is your registration receipt.

**Mathura:** Thank you, please

**Clerk:** No mention please.

---

Blessed be letters – they are the monitors; they are also the comforters; and they are the only true heart - talkers.

– ANONYMOUS

Every man is a volume, if you know how to read him.

– CHANNING

I have received no more than one or two letters in my life that were worth the postage.

– THOREAU

# Pick & Choose

# BUSINESS LETTERS 3



## From the Pen of Prof.A.V.Manivasagar....

## Part. 1- Financial Letters

**Money makes the man (ARISTODEMUS). Business links all mankind(GARFIELD). The motto of business is money. Business letters are with money motto infused into them. They are purposively divided in this series into three parts - financial, commercial and managerial - though absolute partition is an eluding one. These technically and scrupulously written content - specific business letters are concise, clear and convincing in nature. Here you have not to think but to pick and choose.**

### 8.1. ESTIMATE OF REPAIRS

Dear Sir,

Our building needs some urgent repairs. Would you please send your man to examine it and give us an estimate of the cost so that work may be entrusted to you.

Thanking you,

Yours faithfully,

### 8.2. REPLY TO ABOVE

Dear Sir,

We have carefully examined the work and have the pleasure to submit our estimate of expenses on repair herewith.

We may add that the figure quoted is for the best materials and labour.

Hoping that our quotation will be acceptable to you.

Yours faithfully,





### 9.1. LOSS OF DIVIDEND WARRANT

Dear Sir,

I have lost my dividend warrant No. 205 in respect of my two hundred shares held in your bank.

Kindly inform how can I obtain a duplicate dividend warrant.

Thanking you,

Yours faithfully,

### 9.2. REPLY TO ABOVE

Dear Sir,

With reference to your letter dated ............., we are enclosing the necessary form which should be filled in by you and send to the Manager, Serendib Bank Ltd., 3/9, Lloyd Avenue, Colombo-3 for obtaining a duplicate dividend warrant.

Assuring you of our best help always,

Yours faithfully,

### 10.1. REDATING A CHEQUE

Dear Sir,

Kindly have your cheque No. 990 for Rs. 10000/- redated, as the period of three months allowed for payment has expired.

Thanking you,

Yours faithfully,

### 10.2. REPLY TO ABOVE

Dear Sir,

Your cheque, redated, as desired by you, is enclosed herewith.

Please acknowledge the receipt.

Yours faithfully,

## 11.1. STOPPING PAYMENT OF CHEQUES

Dear Sir,

Kindly stop payment of two cheques No. ....... and No......., dated ......... issued by me in favour of Mr.R.Venugopalan for Rs. 7000/- and Rs. 15000/-, respectively. Hoping to be excused for the trouble.

Yours faithfully,

## 11.2. REPLY TO ABOVE

Dear Sir,

Your instructions have been noted regarding the stoppage of payment on cheques No.......... and No....... for Rs. 7000/- and Rs. 15000/- respectively.

Though we have taken note of your instructions and will take every care to withhold payment on these cheques, the bank, however, does not legally bind itself, if payment is made through oversight.

Yours faithfully,

Never ask of money spent
Where the spender thinks
it went
Nobody was ever meant
To remember or invent
What he did with every cent.

-ROBERT FROST
*(The Hardship of Accounting)*





## பல் பயன் தரு(ம்) மரங்கள்




பேராசிரியர் கு.மிகுந்தன்,
தலைவர்,
விவசாய உயிரியல் துறை,
விவசாயபீடம்,
யாழ். பல்கலைக் கழகம்.





வாருங்கள் எம்மினிய உறவுகளே!

பல பயன்களையுடைய மரங்களை இனங்காணுவதன் மூலம் அவற்றினை அழியவிடாது பாதுகாப்பதுடன் அவ்வாறான மரங்களை மேலும் வளர்த்து உச்சபயன்பாட்டை பெறுவதை உறுதி செய்து கொள்வோமா? எங்களது பிரதேசத்திற்குரிய மரமாகவும் அருமை பெருமையாக ஆங்காங்கே வளர்ந்திருக்கும் தேத்தா மரத்தைப்பற்றி பலரும் பொதுவாகவே அறிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனாலும் பல பயன்களை தன்னகத்தே கொண்டு வளரும் தேத்தா போன்ற மரங்களின் தனித்துவத்தன்மையை யாவரும் அறியக்கிடைக்கும் போது இப்படியான மரங்களை கவனிக்கத்தவறிவிட்டோம் என எண்ணத்தோன்றுகின்றது.

இத்தகைய தனித்துவமான சிறப்புக்களையுடைய தேத்தா போன்ற மரங்களின் பயன்பாட்டை இந்நல்லுலகம் பெற்று பயன்னுற வேண்டுமேன்பதே இக்கட்டுரைத் தொடரினது எதிர்பார்ப்பாகும்.

“தேத்தா” என்னும் பெயரை பலரது வாயில் உச்சரிக்கப்பட்டிருக்கவே வாய்ப்பில்லாது இருப்பினும் நாம் அருந்தும் நீரை நன்னீராக்கித்தரும் சிறப்பியல்பு இம்மரத்தின் விதைகளுக்குண்டு. “தவித்த வாய்க்கு ஒரு சொட்டுத்தண்ணீர்” என்பதற்கிணங்க தலைக்கு மேல்





வரும் சூரியனின் வெப்பக்கதிர்களை எதிர்கொள்ள முடியாது தவிக்கும் எம் தேசத்து மக்களுக்கு உடல் வெப்பத்தை சீராக்க இம் மாதங்களில் (மரர்ச்சு, ஏப்ரல் மற்றும் மே மாதங்கள்) நிறையவே தண்ணீரை, அதுவும் நல்ல நீரை அருந்தவேண்டும். ஆனால் நன்னீரைப்பெறுவது இனி வரும் காலங்களில் சிரமமாக இருக்கப்போகின்றது. கரையோரப் பிரதேசங்களில் உள்வாங்கப்படும் கடல் நீரால் அநேகமான குடிநீர் கிணறுகளில் உவர்நீரினளவு அதிகரிப்பதும், அதிகரித்த வேளாண் செய்கையினால் அகத்துறிஞ்சப்படும் நீரினளவு அதிகரிப்பதால் (over extraction) அநேகமான வேளாண் கிணறுகளில் உள்ள நன்னீர் வில்லையினளவு குறைவடைய இவ்வாறான நன்னீர் வில்லையினுள் உவர் நீர் உட்புகுதல் தவிர்க்க முடியாததாகிவிடும்.

**தாவரவியலாளரின் பக்கத்திலிருந்து...**

தேத்தா மரத்தை பொதுவாக ஆங்கிலத்தில் clearing nut என அழைப்பர். தமிழில் தேத்தா அல்லது தேற்றாங்கொட்டை என அழைக்கப்படுகிறது. இதற்கு தாவரவியல் ஆய்வாளர்கள் *ஸ்ரைக்நொஸ் பொட்டாற்ரோறியம் (Strychnos potatorium)* என பெயரிட்டுள்ளனர். இது லோகானியேசியே (Loganiaceae) குடும்பத்து உறுப்பினர்.

**தேத்தாவின் சிறப்பியல்பு**

இலங்கையின் மூன்றில் இரண்டு பகுதி உலர்வலயமாகும். இவ்வாறான உலர்வலயத்திற்குரிய மரம் இது. ஓரளவு உயரமாக வளரும். விசாலமானதும் ஓரளவிற்கு அடர்த்தியான விதானத்தை (மேற்பகுதியை) கொண்டது. இதனது பட்டை கடினமானதாகவும் ஆழமான பிளவுகளையும் கொண்டிருக்கும். இப்பட்டை வைரம் போன்றிருப்பினும் தக்கைத் தன்மையானதாகும். மரம் முதிர்வுறும் போது பட்டை சிறிய கோணமுள்ள செதில்களாக உதிர்வுறும். இலைகள் காம்புகளற்றவை. இம்மரத்தினது கனிகள் சிறியவை. விதைகள் 8 மி.மீ அளவுக்குச் சிறியவை. இவ்விதைகள் கலங்கிய நீரை (மண்டித் தண்ணீர்) தெளிவடையச் செய்யும். ஒரு மட்பானையில்





உட்புறத்தை இந்த விதையினால் தேய்த்தபின் நிலைக்க விட்டால், பானையிலுள்ள நீர் பருகக்கூடியதாக மாறும். விதைகள் நச்சுத்தன்மையற்றவை. மரம் வெட்டுமரமாக பயன்படும். மஞ்சள் நிற முடையதுடன் நீண்ட பாவனைக்குரியது. இம்மரத்தை கட்டடத்தேவைகளுக்கும் வண்டில்கள் செய்வதற்கும் பயன்படுத்துவர்.

நோயாளிகளுக்கு சிறந்த நிவாரணி. விதைகளும் வேரும் சுதேச மருத்துவத்தில் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. தேத்தா கனிகள் கண் நோய்கள், நஞ்சாதல், சிறுநீர் பிரச்சனைகள் மற்றும் தலையில் ஏற்படும் நோய்களை குணமாக்க வல்லன. யுனானி மருத்துவத்தில் விதைகளை நுரையீரலின் தன்மையை பேணவும் சிறுநீரக கோளாறுகள், மற்றும்

**தேத்தா மரத்தினது வேதியியல் பெறுமானங்கள் பின்வருமாறு ஆராயப்பட்டுள்ளது.**
**வேதியியல் பெறுமானம் / உலர் நிறைக்கானது**

| | வேர் (%) | மரப்பட்டை (%) | சேகரித்த விதை (%) | விற்பனைக் குரியவிதை (%) |
|---|---|---|---|---|
| அல்கலொயிட்டுகள் | 1.7 | 2.2 | 1.4 | 1.3 |
| பிளேவனொயிட் | 0.14 | 0.374 | 0.021 | 0.021 |
| பீனோல்கள் | 0.209 | 0.167 | 0.039 | 0.059 |
| தனின்கள் | 12.22 | 20.00 | 18.00 | 18.00 |
| சப்போனின்கள் | 1.505 | 0.405 | 5.135 | 4.741 |

**Source:** Mallikharjuna, P.B., Rajanna, L.N., Seetharam, Y.N. and Sharanabasappa, G.K. 2007. Phytochemical Studies of *Strychnos potatorum* L.f.- Medicinal Plant, E-Journal of chemistry, 4(4):510-518.

**சுதேச மருத்துவத்தில்...**

தேத்தா மரத்தினது வேர்கள் அனைத்து வகையான தோல் வியாதிகளையும் குணமாக்க வல்லது. லியூக்கோடேமா கண்பார்வை ஆகியனவற்றை நிவர்த்திக்கவும் பயன்படுத்துகிறார்கள். இவற்றுடன் கால் மூட்டுவாத நோயினை (Rheumatoid Arthritis) குணமாக்கவும் பயன்படுகின்றது.

உலக சுகாதார நிறுவன்தினது தகவலின்படி தேத்தா மரத்திலுள்ள திண்மமாதல் இயல்பினது வேதியியல் தன்மையினை ஆராய்ந்த போது இதிலுள்ளது ஒருவகை பொலிசக்கரைட்டு எனவும் அதில் 1:7 எனும் விகிதத்தில் கலக்ரோமனன் மற்றும் கலக்ரன் இருப்பதாகவும் அறியப்பட்டுள்ளது. இந்த வேதியியல் பொருட்களின் கூட்டினாலேயே விதைச்சாறு பலவிதமான நோய் குணமாக்கும் இயல்பை கொண்டிருப்பதாக கூறப்படுகின்றது.

இத்தகைய சிறப்பியல்புகளுடைய தேத்தா மரத்தை இனப்பெருக்கி நடுகை செய்து அதனது பல்பயன்களை அனைவரும் பயன்படுத்தும் வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும். பெரிதாக நடுகையின் போது மிகுந்த அக்கறை தேவையற்ற மரம். விறகுக்காகவும் ஏனைய தேவைக்காகவும் பயன்படும் இம்மரம் இனிவரும் சந்ததியின் சொத்து ஆகும்.

***


## *உங்களது கீபோட் மற்றும் மவுஸை தேவையற்று மற்றவர்கள் பயன்படுத்தாது தடுக்க...*

நீங்கள் உங்களது கீபோட் மற்றும் மவுஸை பயன்படுத்தாத நேரத்தில், குழந்தைகள் அல்லது ஏனையோர் காரணமில்லாமல் பயன்படுத்துவதில் இருந்து தடுக்க வேண்டுமா?

தொடர்ந்து கணனியைப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் போது, சிறிது நேர இடைவெளியாக அவ்விடத்தை விட்டு விலகி செல்லும் போது குழந்தைகள் மற்றும் ஏனையோர் தேவையில்லாமல் கணனியின் கீபோட் மற்றும் மவுஸை பயன்படுத்துவதிலிருந்து தடுப்பதற்கு KeyFreeze என்ற மென்பொருள் உதவுகிறது. இந்த மென்பொருளைப் பயன்படுத்தி உங்கள் கணனியின் கீபோட் மற்றும் மவுஸை தற்காலிகமாக லொக் செய்து வைக்க முடியும். இந்த மென்பொருளை தரவிறக்கி நிறுவியபின் இயங்கச்செய்து லொக் செய்யலாம். மீண்டும் பயன்படுத்த லொக்கை எடுப்பதற்கு Ctrl+Alt+Del கீகளுடன் Esc கீயையும் அழுத்திவிட்டால் போதும்.

**DOWNLOAD PAGE**

http://keyfreeze.com/



தர்சன், கொழும்பு





# நயாகரா நீர்வீழ்ச்சி



"நயாகரா நீர்வீழ்ச்சி" அல்லது "நயாகரா பேரருவி" என்பது வட அமெரிக்காவின் வட கிழக்குப்பகுதியில் உள்ள புகழ் மிக்க ஒரு பேரருவி. இது உலகத்திலேயே உள்ள அருங்காட்சிகளில் ஒன்றாக போற்றப்படுகின்றது. இப்பேரருவி சுமார் பன்னிரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பனி உருகி நயாகரா ஆறாக மாறியது. அந்த ஆற்றிலிருந்து உருவானதுதான் இந்த நயாகரா நீர்வீழ்ச்சி. இவ் ஆறு "ஈரி ஏரியில்" தொடங்கி வடக்கு நோக்கிப் பாய்ந்து "ஒண்டாரியோ" ஏரியில் கலக்கிறது. நயாகரா என்னும் பெயர் இப்பகுதியில் வாழ்ந்த "நயாககரிகா" என்ற பழங்குடியினரை அழைக்கப் பயன்பட்டதாக அறியப்படுகிறது.

இப்பேரருவி கனடாவிற்கும் ஐக்கிய அமெரிக்காவிற்கும் இடையிலான எல்லையில் காணப்படுகின்றது. சுமார் 56 கி.மீ நீளமுள்ள நயாகரா ஆற்றின் பாதி தொலைவில் அமைந்துள்ளது. இது தனியான இரண்டு பெரிய அருவிகளைக் கொண்டது. சுமார் 85% நீர் கனடாவில் உள்ள "ஹோஸ் ஷு" அருவி என ஆங்கிலத்தில் வழங்கப்படும் குதிரை இலாட அருவியிலும், மீதம் அமெரிக்கப்பகுதியில் உள்ள "அமெரிக்கன்" அருவியிலும் விழுகின்றது. அமெரிக்கா, கனடா இரு நாடுகளின் எப்பக்கம் இருந்து

பார்த்தாலும் இந்தப்பக்கம்தான் அழகு, இல்லை இல்லை அந்தப்பக்கம்தான் இதைவிட அழகு என்று போட்டி போட்டுக் கொண்டு சவால் விடுவதைப் போல் வர்ணிக்க முடியாத அழகோடு விளங்குகிறது. இரு பக்கங்களிலும் இராட்சத வேகத்துடன் அருவியின் நீர் வீழ்ச்சியுறும் போது அதன் வேகத்தினாலும் அழுத்தத்தினாலும் மேக மூட்டம் ஏற்படுகின்றது. இதனால் நூறடி தூரம் வரையில் நீர்த்துளிகள் பன்னீர் தெளிப்பது போல விழுந்து பார்ப்பவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

நயாகரா நீர்வீழ்ச்சியில் ஆறுமில்லியன் கன அடிக்கு அதிகமான நீரானது ஒவ்வொரு நிமிடமும் இந்த அருவியினூடு பாய்ந்து செல்கிறது. உலகில் மிகவும் பரவலாக அறியப்பட்ட இந்த அருவியானது வட அமெரிக்காவின் அதிசக்தி வாய்ந்த அருவியாகவும் இருக்கிறது.

அழகிற்கு பெயர்போன நயாகரா அருவி நீர் மின்சாரத்திற்கும், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்குமான ஒரு பெறுமதிமிக்க இயற்கை மூலமாகும். இயற்கை அதிசயமான நயாகரா அருவியின் இரட்டை நகரங்களான நயாகரா ∴பால்ஸ், (நியூ யோர்க்) நயாகரா ∴பால்ஸ் (ஒன்டாரியோ) ஆகியவற்றை உள்ளடக்கிய நிலப்பகுதி கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக புகழ் பெற்ற ஒரு சுற்றுலாத்தலமாக விளங்குகிறது.

***

**மீரா / யாழ். பல்கலைக்கழகம்**

---

......? : *"இந்த களவு கேசில இருந்து உன்ன காப்பாற்றியிட்டன். களவெடுத்த நகையை நீயே வைச்சிரு. நான் கேட்ட ஃபீஸை மட்டும் தந்தால் போதும்"*

**திருடன்** : *"சேர், நான் களவெடுத்த நகேன்ர பெறுமதியை விட உங்கட ஃபீஸ் அதிகம்."*

*"என்ர பொடியன் நாலு பேர் சிரிக்கிற மாதிரி எந்தக் காரியத்தையும் செய்யமாட்டான்"*

*"அப்படியா! அவன் என்ன செய்யுறான்?"*


*"மெகா சீரியல் (தொடர் நாடக) இயக்குனரா இருக்கிறான்"*







# உடலைக் காக்கும் ஒமேகா-3 கொழுப்பு



கொழுப்பு என்றாலே உடலுக்குத் தீமை தருவது என்றுதான் எம்மத்தியிலே கருத்து இருக்கிறது. ஆனால் ஒமேகா-3 என்றொரு கொழுப்புவகை பலவகை நோய்களில் இருந்து எம் உடலைப் பாதுகாக்கின்றது என்ற உண்மையை நாம் தெரிந்துகொள்ளவேண்டும். நாம் உட்கொள்ளும் உணவு வகைகளில் இரண்டு வகையான கொழுப்புகள் இருக்கின்றன. ஒமேகா-3 கொழுப்பு, ஒமேகா-6 கொழுப்பு என்பவைகள்தான் அவை. நாம் அன்றாடம் உபயோகிக்கும் தாவர எண்ணெய்களிலும் மாமிச வகைகளிலும் ஒமேகா-6 வகை கொழுப்பு இருக்கிறது. கடல்வாழ் உயிரினங்களில், முக்கியமாக மீன்களில் காணப்படுவது ஒமேகா-3 வகைக்கொழுப்பு ஆகும்.


மேலும், ஒரு சில தாவரங்களிலும் இந்த ஒமேகா-3 வகைக்கொழுப்பு உள்ளது. (சர்க்கரைக் கிழங்கு, சணல் விதை) எவ்வகைக் கொழுப்பு நம் உடலிலுள்ளது என்பதை பொறுத்து நம்முடைய உடல் நலம் தீர்மானிக்கப்படுகின்றது. ஒமேகா-3 கொழுப்பு வகை அத்தியாவசியமான கொழுப்பாகக் கருதப்படுகின்றது. ஏனெனில், அவை எமது உடலுக்கு மிக முக்கியமானதாக இருந்தாலும் நம் உடலால் தொகுக்க முடியாதவையாகும். ஆகவே, உணவு மூலமாகவே அதனைப் பெறவேண்டும். ஒமேகா-3 வகைக் கொழுப்பு மூளை தொழிற்பாடு, உடலின் வளர்ச்சி என்பவற்றில் முக்கியமான பங்கினை வகிக்கின்றது. இவை இதய நோய்களினை குறைப்பதன் காரணமாக பிரசித்தமானவை.



அதுமட்டுமல்லாது முக்கிளிசரைட் (triglyceride) அளவை குருதியிலே குறைப்பதன் மூலமாக குருதி ஒருங்கொட்டலை இழிவாக்குவது மட்டுமல்லாது இதயம், குருதிக்குழாய் என்பவற்றை பாதுகாப்பதிலும் முக்கிய பங்காற்றுகின்றன.

உண்மையிலே, கர்ப்பகாலத்திலே தமது தாயிடமிருந்து இவ் ஒமேகா-3 கொழுப்பை போதியளவு பெறமுடியாது போன குழந்தைகள் அவர்களுடைய பார்வையை விருத்திசெய்துகொள்ள முடியாதவர்களாகவும் நரம்புத்தொகுதி சார் நோய்களை கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள். ஒமேகா-3 கொழுப்பின் பற்றாக்குறையின் அறிகுறிகளாக ஞாபகசக்திக்குறைவு, உலர்ந்த சருமம், களைப்பு / சோர்வு, இதய நோய்கள், மன அழுத்தம் மற்றும் சீரற்ற குருதிச் சுற்றோட்டம் போன்ற நோய்கள் குறிப்பிடப்படுகின்றன.

ஒமேகா-3 , ஒமேகா-6 கொழுப்புகளுக்கு இடையே சமநிலையை பேணுவது மிகவும் முக்கியமானதாகும். ஒமேகா-3 கொழுப்புக்கள் ஒவ்வாமை, வீக்கம் போன்ற தன்மைகளை இழிவாக்குகிறது. ஆனால் ஒமேகா-6 கொழுப்புக்கள் அதற்கு மாறான



மீன் எண்ணெய் Omega-3 கொழுப்பு கொண்டது

தொழிற்பாட்டைக் கொண்டுள்ளன. ஒமேகா-3 , ஒமேகா-6 கொழுப்புகளுக்கு இடையே சமநிலையை கொண்ட உணவினை (Mediterranean diet) உண்பதன் மூலமாக இதயநோய்கள் ஆக்கிரமிக்கும் வாய்ப்பினை இழிவாக்கிக்கொள்ளலாம். இவ்வகை உணவுகள் அதிகளவிலே இறைச்சியினைக் கொண்டிருப்பதில்லை.

ஒமேகா-3 கொழுப்பினை கொண்ட உணவு வகைகளான தானியங்கள், உடனடி பழங்கள் மற்றும் மரக்கறிகள், மீன்கள், ஒலிவ் எண்ணெய், உள்ளி போன்றவற்றை உள்ளடக்கியிருக்கிறது.

ஒமேகா-6 கொழுப்பு நம் உடலில் அதிகமாக இருந்தால் இரத்தத்தின் ஒட்டுந்தன்மை அதிகமாகிறது. இரத்தக் குழாய்கள் கடினமாகி அவற்றின் மீள்தன்மை குறைகின்றது. குருதிக் குழாய்களின்






சுவர்களின் நெகிழ்கின்ற தன்மை(விரிதல்) குறைவடைகின்றது. இக் காரணங்கள், மூளை மற்றும் இதயப்பகுதியில் உள்ள இரத்தக் குழாய்களில் அடைப்புகளை ஏற்படுத்த வழிவகை செய்கின்றன. ஒமேகா-6 கொழுப்பு நம் உடலில் அதிகமாக இருந்தால் இரத்தத்தின் ஒட்டுந்தன்மை குறைந்து மீள்தன்மை அதிகரித்து இரத்தக் குழாய்களில் கொழுப்பு படிவது தடுக்கப்படுகின்றது. குருதிக் குழாய்களின் சுவர்களின் நெகிழ்வுத்தன்மை அதிகரிப்பதனால் இரத்தக் குழாய்களில் சிறிய அடைப்பு இருந்தாலும் கூட சிவப்பு அணுக்களின் நெகிழுந்தன்மையினால் இரத்தஓட்டம் உறுப்புக்களைச் சென்றடைகின்றது. ஒமேகா-3 கொழுப்பின் இவ்வகை அத்தியாவசிய குணாதிசயங்கள் காரணமாக ஒமேகா-3 கொழுப்பின் அளவு குறைவானவர்கள், இதய நோய்களினால் அவதியுறுபவர்கள், கர்ப்பிணி தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், முதியோர்கள், விளையாட்டு வீரர்கள் என்போருக்கு இது பரிந்துரை செய்யப்படுகின்றது.

எனவே, ஒமேகா-3 கொழுப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு அதனைக் கொண்டுள்ள உணவு வகைகளை உணவில் சேர்த்துக்கொள்ள





வேண்டும். கொழுப்பு என்றாலே உடலுக்குத் தீமை தருவது என்றுதான் எம்மத்தியிலே கருத்து இருக்கிறது. ஆனால் ஒமேகா-3 என்றொரு கொழுப்புவகை பலவகை நோய்களில் இருந்து எம் உடலைப் பாதுகாக்கின்றது என்ற உண்மையை நாம் தெரிந்துகொள்ளவேண்டும். நாம் உட்கொள்ளும் உணவு வகைகளில் இரண்டு வகையான கொழுப்புகள் இருக்கின்றன. ஒமேகா-3 கொழுப்பு, ஒமேகா-6 கொழுப்பு என்பவைகள்தான் அவை. நாம் அன்றாடம் உபயோகிக்கும் தாவர எண்ணெய்களிலும் மாமிச வகைகளிலும் ஒமேகா-6 வகை கொழுப்பு இருக்கிறது. கடல்வாழ் உயிரினங்களில், முக்கியமாக மீன்களில் காணப்படுவது ஒமேகா-3 வகைக்கொழுப்பு ஆகும்.



மேலும், ஒரு சில தாவரங்களிலும் இந்த ஒமேகா-3 வகைக்கொழுப்பு உள்ளது. (சர்க்கரைக் கிழங்கு, சணல் விதை) எவ்வகைக் கொழுப்பு நம் உடலிலுள்ளது என்பதை பொறுத்து நம்முடைய உடல் நலம் தீர்மானிக்கப்படுகின்றது. ஒமேகா-3 கொழுப்பு வகை அத்தியாவசியமான கொழுப்பாகக் கருதப்படுகின்றது. ஏனெனில், அவை எமது உடலுக்கு மிக முக்கியமானதாக இருந்தாலும் நம் உடலால் தொகுக்க முடியாதவையாகும். ஆகவே, உணவு மூலமாகவே அதனைப் பெறவேண்டும். ஒமேகா-3 வகைக் கொழுப்பு மூளை தொழிற்பாடு, உடலின் வளர்ச்சி என்பவற்றில் முக்கியமான பங்கினை வகிக்கின்றது. இவை இதய நோய்களினை குறைப்பதன் காரணமாக பிரசித்தமானவை. அதுமட்டுமல்லாது முக்கிளிசரைட்(triglyceride) அளவை குருதியிலே குறைப்பதன் மூலமாக குருதி ஒருங்கொட்டலை இழிவாக்குவது மட்டுமல்லாது இதயம், குருதிக்குழாய் என்பவற்றை பாதுகாப்பதிலும் முக்கிய பங்காற்றுகின்றன.

**க.கபிதாஸ்**

*(சப்ரகமுவ பல்கலைக்கழகம்)*



*இதில் உள்ள வட்டங்கள் தனித்தனியாகத்தான் உள்ளன. ஒன்றுடனொன்று இணையவில்லை. நம்பமுடியாவிட்டால் விரலால் வட்டத்தின் மீது வரைந்து பாருங்கள்.*





# அறிவியல் வினா விடைகள்

📖உலக தொழிலாளர் தினம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு, திகதி யாது?
1ம் திகதி, மேமாதம், 1889ம் ஆண்டு

📖முதலாவது நடுநிலைகள் மாநாடு எங்கு இடம் பெற்றது?
பெல்கிரேட்

📖கவின்கலைக்கு கல்லூரி அமைத்தவர் யார்?
கே.ஏ.டி.பெரேரா

📖ஐக்கிய அமெரிக்காவின் உளவுப்படையின் பெயர் என்ன?
சி.ஐ.ஏ

📖பின்வருவனவற்றை கண்டறிந்தவர் யார்
எக்ஸ்றே - றொன்ஷன்
நீராவி இயந்திரம் - யேணாஸ் வாட்
புவியீர்ப்பு - ஐசாக் நியூட்டன்
பூமி சூரியனை சுற்றுதல் - நிக்கலஸ் கொப்பனிக்கஸ்
பரிணாமக்கொள்கை - டார்வின்
கணித மடக்கை - சார்ஸ் மேபியர்
மின்சாரம் - சாரடே
அடர்த்தி - ஆக்கிமிடிஸின்

📖இலங்கையில் உணவுமுத்திரை முறை ஆரம்பிக்கப்பட்டது எப்போது?
1979 செப்டெம்பர் 16ம் திகதி

📖இலங்கையின் கடைசி மன்னன் யார்?
ஸ்ரீவிக்ரம ராஜசிங்கன்

📖உலக முடிவு என்ற இடம் எங்குள்ளது?
நுவரேலியா மாவட்டத்தில்

📖இலவச கல்வியின் தந்தை யார்?
சி.டபிள்யூ.கன்னங்கரா

📖முதன் முதல் சந்திரனில் இறங்கிய விண்வெளிக் கப்பலின் பெயர் யாது?
அப்பலோ 11

📖முதன்முறை சந்திரனுக்கு சென்ற மூவர் யார்?
நீல் ஆம்ஸ்ரோங், மைக்கல் கொலன்ஸ், எட்வின் ஒல்ரின்

📖2ம் உலக யுத்தத்தின் போது அழிக்கப்பட்ட இரு ஜப்பானிய நகரங்கள் யாவை?
ஹிரோசிமா, நாகசாகி

📖ஆகாச மரணம் என்றால் என்ன?
திபெத்தில் இறந்தவர்களின் உடலை மலை உச்சிக்கு கொண்டு சென்று துண்டுகளாக வெட்டி கழுகுகளுக்கு உணவாக கொடுப்பர்.

📖அல்பிரட் நோபல் யார்?
சுவீடன் தேசத்து கைத்தொழிலாளர், டைனமைற்றைக் கண்டறிந்தவர். தனது செல்வத்தை "நோபல்" பரிசளிப்பதற்காக கொடுத்தவர்.

📖பின்வரும் சொற்களின் கருத்துக்களைத் தருக
இருண்ட கண்டம் - ஆபிரிக்கா
சூரியோதய நாடு - யப்பான்

📖எந்த ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையால் உலக குழந்தைகளின் ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டது?
1979

📖ஐக்கிய நாடுகள் சபை எப்போது மனித உரிமை பிரகடனத்தை வெளியிட்டது?
1948 டிசம்பர் 10

📖மக்கள் வங்கி ஆரம்பித்த ஆண்டு எது?
1961

📖மாலைதீவு தேசிய கீதத்தை ஆக்கிய இலங்கையர் யார்?
டி.அமரதேவா

📖ரஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட சிங்கள நாவல் எது?
கம்பெரலியா (மாட்டின் விக்கிரமசிங்க)

📖ஸ்பெயின் நாட்டின் பிரபலமான நடனம் எது?
ஃபிளமிங்கோ (Flamingo)

📖உலகின் மிக உயரமான பறவையான தீக்கோழியின் மற்றொரு பெயர் என்ன?
ஒட்டகப் பறவை


📖அகராதியை முதன்முதலில் தயாரித்தவர் யார்?
சாமுவேல் ஜோன்சன்

📖புத்தரின் தந்தையின் பெயர்?
சுத்தோதனர்





சிறுகதை




பங்குனி மாதத்திற்கே உரித்தான வகையில் காலைச் சூரியன் தன் கதிர்க்கரங்களை பூமிப்பந்தில் படர ஆரம்பித்திருந்தான்.

"என்ன வெய்யிலப்பா, எட்டு மணிக்கே இப்படியெண்டா போகப் போகச் சொல்லத்தேவையில்லை." என்று சப்புக் கொட்டியபடியே அரிதட்டில் மண்ணைப் போட்டு அரிக்கத் தொடங்கினான் அன்ரன்.

"இண்டைக்கெப்படியாவது முக்காத்திட்டத்த முடிச்சுப் போடுங்கோ தம்பியவை. தெரியும் தானே நாள் வைச்சாச்சு. இழுத்து பறிச்சுக் கொண்டிருந்தா அலுவல் பிழைச்சுப்போம்" தனது தேவையின் அவசியப் பாட்டை வேலையாட்களுக்கு உணர்த்துமாற்போல் கூறியபடியே பரமநாதன் அந்த இடத்திற்கு வருகிறார். அதற்காகத்தான் நாம் முயற்சி செய்கிறோம் என்ற பாணியில் தலையசைத்தபடியே வேகவேகமாய் அன்ரனும் அவனது உதவியாளனும் வேலையில் தமது கவனத்தைச் செலுத்துகின்றனர்.

அந்த வீட்டிற்கு புதுமைப்பொலிவூட்டும் நிகழ்ச்சி தீவிரமாக நடந்தேறிக் கொண்டிருக்கிறது. மீளக் குடியமர

மக்கள் இந்த கிராமத்துக்கு வந்து ஆறு மாதங்கள்தான் ஆகிறது. யுத்தத்தின் எச்சங்களை மறப்பதற்கு காலத்தோடு சேர்ந்து இந்த மக்களும் கைகோர்க்க முயற்சிக்கிறார்கள். அந்த முயற்சியில் ஒரு பங்காளியாகத்தான் பரமநாதனும் மாறிவிட்டிருக்கிறான். ஏறக்குறைய அரைவாசி சிதைவுற்ற அவரின் வீடு மீளவும் உருப்பெறுகிறது. பரமநாதனைப் பொறுத்தவரை இந்த வீடு பூர்வீகத்தின் அடையாளம்; தமது வாழ்தலுக்கான சாட்சியைக் கூறும் ஆதாரம். அதனால்தான் மிகுந்த பிரயத்தலைப்பட்டு மீளவும் அந்த வீட்டை பழைய நிலைபெற வைக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறார்.

"தம்பியவை, தேத்தண்ணியை குடிச்சிட்டு நில்லுங்கோவன்" பரமநாதனின் வார்தை அந்த வேலையாட்களின் பணியை நிறுத்தியது. கடிகார முட்கள் பத்துமணியைத் தாண்டி நகரத்தொடங்கியிருந்தன. தேயிலைச் சாயம் செறிவாய் இட்டுத் தயாரிக்கப்பட்ட அந்தத் தேனீரை ஆழமாக உறிஞ்சிச் சுவைத்தபடியே "இந்த வீட்டை நீங்கள் திருந்த நினைச்ச நேரம் ஐயா, புது வீடு கட்டியிருக்கலாம்" என்றான் அன்ரன்.

"ஒரு வகையில பார்த்தா நீர் சொல்லுறது சரிதான். ஆனா அந்த வீடு மாதிரி, கட்ட நினைக்கிற புது வீடு வருமெண்டு எனக்கு நம்பிக்கையில்லை. அதாலதான் நான் இதையே திருப்பிக்கட்டுறன்" அவரின் தீர்மானத்தின் நியாயப் பாட்டை சொல்லியபடி வீட்டினை ஆழமாக ஊருவிப் பாத்தார். "இந்த வெடிப்புகள் எல்லாம் கொத்திப் பூசவேணும். அப்பதான் பார்க்கிறதுக்கு அமைப்பா இருக்கும்" என்று கூறிவிட்டு, "சரி தம்பியவை நான் உதில ஒருக்கா கடையடி மட்டும் போட்டுவாறன்" என்று அவ்விடத்தில் இருந்து விடைபெறுகிறார் பரமநாதன்.

சிமெந்தையும் மணலையும் தண்ணீர் ஊற்றி கலந்தபடியே "இந்த வெடிப்புகளை எப்படித்தான் கொத்திப் பூசினாலும் பழைய நிலைக்கு வாறது கஷ்டம்தான்" என்றான் அன்ரன்.

"எங்கட வாழ்க்கை மாதிரி எண்டு சொல்லுறியளோ அண்ணை" என்று உதவியாளன் கேட்க அன்ரன் ஆச்சரியமாக அவனைப் பார்த்தான்.

"நீ எங்கையோ இருக்க வேண்டியனி, என்னோட வந்து மாரடிக்கிறாய்" அன்ரன் கூற பதிலுக்கு அந்த உதவியாளனிடமிருந்து சிரிப்பு மட்டும் பதிலாகக் கிடைத்தது. அந்த சிரிப்பிற்குள் ஆயிரம் அர்த்தங்கள் ஒளிந்திருப்பதாய் நாதனுக்குப் பட்டது.

இன்றைய பொழுதுக்குள் கணிசமான வேலையினை முடித்துவிட வேண்டும் என்ற அவசரம் அவர்கள் இருவரிலும்





தொற்றியிருந்தது. சுவரினை அழுத்தமாக அன்ரன் பூசிக்கொண்டிருந்தான்.

வெளியில் சென்றுவிட்டு வந்த பரமநாதன் "உங்கட கெட்டித்தனத்தால ஒரு மாதிரி நிமித்திக்கொண்டு வாறியள்" என்று பாராட்டுப் பத்திரம் வாசித்தவாறு அந்த இடத்திற்கு வந்தார்.

"ஐயா நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்காதையுங்கோ. உங்கட பேத்தீன்ர கலியாண வீட்டுக்கிடையில வேலையை ஒப்பேற்றித்தாறம்" என்றான் அன்ரன்.

"என்ர மகளும் மருமகனும் இல்லாமப் போனாப்பிறகு பேத்திதான் என்ர உலகமெண்டாச்சுது. இந்த வீட்டில அவளுக்கொரு கலியாணத்த செய்து பார்க்கிறதால எனக்கொரு நிறைவு ஏற்படுமெண்டு நான் நம்புறன்" கூறுகிற போதே பரமநாதனின் குரல் தளதளத்தது. அவரது கண்கள் பனித்திருந்ததையும் அன்ரன் அவதானிக்கத் தவறவில்லை. "எப்படித்தான் நாங்கள் பூசி மினுக்கினாலும் ஐயா, அங்கனேக்க சில வெடிப்புகள் தெரியத்தான் பார்க்கும்"

"அது எனக்கும தெரியும் தம்பி. இருந்தாலும் நாங்கள் இதைப் பூசி மினுக்கத்தான் வேணும்." பரமநாதனின் தீர்மானத்தில் ஒருவித தெளிவிருந்தது.

சூரியனும் உச்சியில் நின்று உஷ்ணத்தை உமிழ்ந்து கொண்டிருந்தான். அந்த வீடு பூசி முடிக்கப்படும் பணி காலத்தை உத்தேசித்து வேகமெடுத்திருந்தது.

***

**வயதான பெண்:** "டொக்டர் என்ர வலது கால் வலிக்கிறது"

**வைத்தியர்:** "வயசானா அப்படித்தான். பயப்படத்தேவையில்லை"

**வயதான பெண்:** "இடது காலுக்கும் அதே வயசுதானே டொக்டர். அது வலிக்கேல்லை"



"உலகம் அழியப் போகுதெண்டு எடுத்துக்கொள்ளுவம். உடனே நாசாக்காரர் எல்லாரையும் வேறயொரு கிரகத்துக்கு கூட்டிக்கொண்டு போனால், அங்க நீ என்ன கொண்டு போவாய்?"

"கிளுவங்கதியால்"

"ஏன்???"

"அங்க போய் எல்லையை போடவேண்டாமா?"


# கவியரங்கம்

## நயாகரா

இது என்னடா இது,
அந்த பாறை முகடுகளில்
தண்ணீரை துவைத்துக்
காயப்போட்டது யார்?

இது எழுந்து நிற்கும் நதியா?
தண்ணீரின் விஸ்பரூபமா?
நக்கீரா இதை
நீர் வீழ்ச்சி என்பது பொருட்குற்றமல்லவா!
நீருக்கு இது வீழ்ச்சியல்ல, எழுச்சி!

உன் பழமொழி பொய்யடா தமிழா!
இதோ இங்கே நெருப்பில்லாமலே புகைகிறதே!
இங்கென்ன தண்ணீர் முத்துக்குளிக்கிறதா?
இது என்ன வானுக்கும் பூமிக்கும் வைர நெசவா?
அது என்ன
தற்கொலை புரியும் தண்ணீருக்கு
அத்தனை ஆனந்தமா?



கண்டேன் கண்களுக்குள் மழை
கேட்டேன் காதுக்குள் கச்சேரி
தொட்டேன் ஜீவனுக்குள் சில்லிப்பு
உண்டேன் பல்லிடுக்கில் பனிக்கட்டி
நுகர்ந்தேன் இனம் தெரியாத ஈரமணம்

ஓகோ! கண்டு கேட்டு உண்டு
உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும்
அருவியின் கண்ணுமுள
தொழில் மறந்தன என் புலன்கள்





என் கண்கள் அருவி குடிக்கும்
என் செவிகள் சப்தத்தில் எதையோ தரிசிக்கும்
மனமென்னும் புல்வெளியில் ஆச்சரியம் பூச்சொரியும்

அந்த படிக கண்ணாடியை
ஒரு கோடிச் சிதறல்களாய் உடைத்தது யார்?
இறந்து போன கம்பா எழுந்து வா!
இதோ பார் தண்ணீரின் யுத்த காண்டம்
விழுவதில் அழகு மழையில் மட்டும் தான்
அழிவதில் அழகு அலையில் மட்டும் தான்
அழுவதில் அழகு அருவியில் மட்டும் தான்
இந்த அனுபவ சுகங்களை
அள்ளி வைத்துக் கொள்ள
இருதய கூட்டுக்குள் இடமில்லையே சாமி.



நடந்து வரும்போது நதி சுரம் பழகி வருகிறது
அருவியில் வந்துதான் அரங்கேறுகிறது
வானவில்லை திரையிடவே இந்த
விண்ணீர்த்திரை விரிக்கப்பட்டதா?
நீர்க்குடும்பத்திற்கு இங்கு மட்டும்
ஒவ்வொரு நாளும் ஓணம் பண்டிகையா?
அருவியே அருவியே அடர்ந்த அருவியே
உன்னை எழுதும் போது
கூறியது கூறலும் குற்றமென்றாகாது

தாஜ்மகால் பாராத இந்தியனும் உண்டு
நயாகரா பாராத அமெரிக்கனும் உண்டு
என்ன செய்வது?
இந்த எந்திர வாழ்க்கையில்
சுவாசிக்காமல் கூட உயிர் வாழ முடிகிறது
இந்த அருவியில் குளித்தால்
வாழ்க்கை வணக்கத்திற்குரியது.
இந்த அருவியில் இறந்தால்
மரணம் கூட மரியாதைக்குரியது.

***


**கவிப்பேரரசு**

## மாதமொரு மனிதர்

# குழந்தைவேலு சோமசுந்தரம்

*வாசகர்களே! "மாதமொரு மனிதர்" என்ற இப்பகுதியில் எமது நாட்டில் இலைமறை காய்களாக இருக்கும் திறமையாளர்களை, தொழில் முயற்சியாளர்களை அல்லது நல்ல சமூக முன்மாதிரிகளை அறிமுகஞ்செய்கிறோம். நீங்களும் இத்தகையோரைப் பற்றிய தகவல்களை எமக்கு அனுப்பிவையுங்கள்.*

*-ஆசிரியர்*



மனிதம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அதனால்தான் உலகமும் நெறிமுறைப்பட்டதொன்றாக இயங்கிக்கொண்டிருக்கிறது. மனிதம் நேசிக்கப்படும் போதுதான் உலகத்தில் அமைதி பூரணமாகச் சாத்தியமாகும்.

மானுடமேன்மையை அவாவும் உயரிய பண்பாளராக திரு.கு.சோமசுந்தரம் அவர்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறார்.

குழந்தைவேலு-சின்னத்தங்கச்சி தம்பதிகளின் புதல்வராகப் பிறந்த இவர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும் பின் கொழும்பு இந்துக்கல்லூரியிலும் தனது இளநிலைக் கல்வியைப் பயின்றார்.

அறுபதுகளில் கொழும்பில் உள்ள தனியார் நிறுவனமொன்றில் கனிஷ்ட தர எழுதுவினைஞராக தனது தொழில் வாழ்வை ஆரம்பித்தார். பணிக்காலத்திலேயே Institute of Administrative Accounting (London) பரீட்சையில் தன் தொழில் திறன் தகைமையை விருத்திசெய்து கொண்டார். 1984 இல் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தில் கணக்குப் பதிவாளராக கடமை புரிந்தார். பின்பு காங்கேசன்துறை சீமெந்து ஆலை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அகியவற்றிலும் கணக்கு பதிவாளராகக் கடமைபரியும் வாய்ப்பினைப் பெற்றார்.

பிறர் நலனில் அர்த்தபூர்வமான அக்கறை செலுத்தி பணிபுரிந்து வருகின்ற பெருமகனாக இவர் இருக்கிறார். இயற்கையை நேசிக்கும் உன்னத பண்பு இவருக்கு உரித்தானது. மரங்கள் எங்கள் சூழலிலிருந்து அகற்றப்படுவதையிட்டு அவருற்ற வேதனையின் வெளிப்பாடாகவே "நிழல்" விருட்சம் இன்று நிமிர்ந்து நிற்கிறது. நிழல் நிறுவனத்தின் வரலாறு என்பது






திரு.சோமசுந்தரம் அவர்களின் வாழ்க்கையை விலக்கி எழுதப்பட முடியாததொன்றாகவே காணப்படுகிறது. "மரம் வளர்ப்போம் மானுடம் காப்போம்' என்ற மகுடத்தைத் தாங்கிய நிழல் நிறுவனத்தின் தாபகரும் இவரே.

எழுபதுகளின் ஆரம்பங்களிலிருந்து எண்பதுகளின் முற்பகுதிவரை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தில் செயல்திறனுள்ள உறுப்பினராக சேவையாற்றிய அனுபவம், பொது நலப் பணிகளில் அவர் தன்னை முழுமையாக அர்ப்பணிப்பதற்கு உதவியிருக்கிறது.

தற்போது தனது நேரத்தின் பெரும் பகுதியை "நிழல்" நிறுவனத்திற்காக அர்ப்பணித்து பணியாற்றி வருகிறார். திரு.சோமசுந்தரம் அவர்களின் எண்ணத்தில் தோன்றி, இன்று பேராசிரியர். க. தேவராசா (பீடாதிபதி, வணிக மற்றும் முகாமைத்தவ கற்கைகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) அவர்களின் தலைமையில் இயங்கிவரும் நிழல் நிறுவனத்தினூடாக இலட்சக்கணக்கான மலைவேம்பு, சமண்டலை, வேம்பு, பலா, தேக்கு, கமுகு போன்ற இன்னும் பல்வேறு பயன்தரு மரங்கள் பாடசாலைகள் மற்றும் தொண்டு நிறுவனங்களூடாக இலவசமாகவே வழங்கப்பட்டன. இன்னும் வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் உதவும் வகையில் மாதாந்த கொடுப்பனவுகளோடு உதவிக்கரம் நீட்ட முன்வந்திருக்கிறது.



*நிழல் நிறுவனத்தினூடாக மாணவனொருவருக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டபோது...*

ஆசிரியராக, சிறந்த சமூகப்பணியாளராக என பல்வேறு தளங்களில் பணியாற்றக்கூடிய ஆளுமைத்திறன் இவருக்கு உண்டு. மற்றவர்களைப் பொருத்தமான வகையில் இனங்கண்டு பழக்கக்கூடிய ஆற்றல் வாய்ந்தவர்.

ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் நிறைந்த பரிச்சயமுடையவர். தூய்மையான எண்ணங்களும் உயர்வான மனப்பாங்கும் மனிதர்களைச் செம்மைப்படுத்த வல்லன என்பதை திடமாக நம்புகின்ற ஒருவர். விளம்பரமுகங்களுக்குள் தன்னை இனங்காட்டிக் கொள்ள விரும்பாத பெருமைக்குரியவர்.

உன்னதமான சமூக மேம்பாட்டு கனவுடன் சேவை புரிந்துவரும் திரு.சோமசுந்தரம் அவர்களின் பணிகள் வெற்றி பெற வரைக்குடும்பமும் தன் வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கிறது.

***க.தர்மசேகரம் (உளவளத்துணையாளர்),***
***பிரதேச செயலகம், நல்லூர்.***


# புதிர் போட்டி இல. 15

**சோ. கிருஷ்ணதாஸ்**

**பரிசு ரூ. 500**

கீழுள்ள புதிர்களுக்கான விடைகளை 05-05-2011 இற்குமுன் எமது முகவரிக்கு அனுப்பிவைக்கலாம். சரியான விடையனுப்பிய அதிஷ்டசாலி மாணவருக்கு ரூபா 500.00 வழங்கப்படும்.

1. "HARMONY" என்ற சொல்லை எத்தனை பாதைகளினூடு உருவாக்கலாம்?




2. $2^{2011}$ இன் பெறுமானத்தின் இறுதி இலக்கம் யாது?


3. $$\frac{1x2x4 + 2x4x8 + 3x6x12 + .......+ 10x20x40}{1x3x9 + 2x6x18 + 3x9x27 + .......+ 10x30x90}$$

*இன் பெறுமானம் யாது?*

*புதிர்ப் போட்டி இல. 13 இற்கான பரிசை வெல்பவர்: செல்வி ரேக்கா நந்தகுமார், தரம் 12, ம/ஆரையம்பதி மகாவித்தியாலயம், மட்டக்களப்பு.*


### இதழ் 13ல் வெளிவந்த புதிர் போட்டிக்கான விடைகள்


i)



iii) குதிரைகள் 20 ஆகும்

iii)








# கனடாவில் பெண் வாழ்க்கை

**ரதி**



மகளிர் தினம் ஒரு காதலர் தினம் போன்று பெரும் கவனயீர்ப்பு, கருத்து முக்கியத்துவம் என்பவற்றை பெறுவதில்லை. இது பெண்களுக்குரிய தினம். பெண்கள் பாவப்பட்ட ஜென்மங்கள், எங்கள் மீது இரக்கம் காட்டுங்கள், அன்பைப் பொழியுங்கள் என்கிற சுயபச்சாதாப புலம்பல்கள் அல்ல இந்த எழுத்துக்கள். பிறப்பிலேயே மறுக்கப்பட்ட, சமூக அரசியல் நிர்ப்பந்தங்களால் பறிக்கப்பட்ட பெண்களின் உரிமைகளை மீட்பதற்கான ஓர் அடையாள நாள்.

ஆரம்பகால பெண்மீதான அடக்குமுறைகள் ஓர் ஆணுக்கு அடங்கியவளாய் பெண் தன்னை உருவாக்கிக் கொள்வது என்பதோடு ஆரம்பித்து, சமூகத்தில் பெண் என்பவள் ஆணின் "கௌரவம்" என்கிற வரை நீடித்தது. இதைத்தான் வள்ளுவனின் வாசுகி, படிதாண்டாப் பத்தினி, கொலையும் செய்வாள் பத்தினி என்றார்கள் காலங்காலமாய். இயற்கையோடும், இயங்கியலோடும் ஒவ்வாத உவமைகளை சொல்லியே பெண் மனம் மயக்கப்பட்டது. வார்த்தைகளின் மகுடியில் மயங்கிப்போன பெண்மனம் இயல்பாய் அடிமை விலங்கை தனக்குத்தானே பூட்டவும் கற்றுக்கொண்டது. இவ்வாறாக, பெண் தனக்குத்தானே விரித்துக்கொண்டதும், சமூகத்தால் விதிக்கப்பட்டதுமான எழுதாத விதிகளோடும், அழுத்தங்களோடும் வாழவும், குடும்பத்தை கட்டிக்காக்கவும் அன்று முதல் இன்றுவரை நிர்ப்பந்திக்கப்படுகிறாள்.

என் பார்வையில் பெண்ணுக்கு இரண்டு விதமான விலங்குகள் பூட்டப்படுகின்றன. கண்ணுக்குத் தெரிந்ததும், தெரியாததுமாக பெண் என்பவளும் காதல், திருமணம் என்கிற இயல்பான உணர்வுகளால் தீண்டப்படும் போது, அது குறித்த கனவுகள், கற்பனைகளில் மூழ்கி தன்னைத்தானே சமூகவிதிகளோடு பொருத்திக் கொள்ளவும், தனக்குரிய புதியதோர் அங்கீகாரத்தை தேடுவதும் இயல்பாய் நடந்தேறுகிறது. தனக்குத்தானே ஓர் விலங்கை பூட்டிக்கொள்கிறேன் என்பது பெண்ணின் கண்ணுக்கும், புத்திக்கும் சுலபத்தில் எட்டுவதில்லை.

கண்ணுக்குத் தெரிந்தே பெண்கள் மீது பூட்டப்படுவது "தாலி" என்னும் விலங்கு. தாலி என்பது ஓர் மரபு.

ஆணும், பெண்ணும் தங்களை திருமணம் என்கிற பந்தத்தில் இணைத்துக்கொள்வதற்கான அத்தாட்சி. மனித நாகரிகம் வளர்ச்சியடைவதற்கு முன், சட்டங்கள், விதிமுறைகள் இயற்றப்படுமுன் மனிதன் திருமணத்தை அடையாளப்படுத்த கண்டுபிடித்தது. அதில் கூட சந்திரமதியின் தாலி அரிச்சந்திரனின் கண்ணுக்கு மட்டும் தான் தெரியும் என்று சொல்லும் அபத்தங்கள்! பெண்ணை இழிவுசெய்து, தாலியின் மகிமையை காப்பாற்றுவது தான் இலக்கியம், மரபு, கலாச்சாரம் என்றால் அது குறித்து பகுத்தறிவை பெண்கள் வளர்த்துக்கொள்வது தவிர்க்கமுடியதாதாகிறது.

திருமண பந்தத்தில் தாலி என்கிற சின்னம் மட்டுமே பெண்ணுக்குரிய எந்தவொரு சமூக, பொருளாதார பாதுகாப்பையும், உத்தரவாதத்தையும் வழங்கி விடுவதில்லை. இரண்டு மனங்களுக்கு இடையே உண்டாகும் வேறுபாடுகளை, இடைவெளியை தாலி என்கிற சின்னம் களைந்து விடுவதுமில்லை. இங்கே திருமணத்திலே தாலி தேவையா இல்லையா என்பதல்ல கேள்வி. தாலி என்கிற சின்னம் இரண்டு மனங்களை இணைக்கிறதா அல்லது மனிதர்களை இணைக்கிறதா என்பதே கேள்வி.

கனடாவில் உலகில் ஏறக்குறைய எல்லா நாடுகளிலிருந்தும் வந்து குடியேறுகிறார்கள். யாராயினும் தங்கள் தனித்தன்மைகளைப் பேண கனடிய சட்ட திட்டங்களில் அனுமதியுண்டு. இலங்கை, இந்தியா, பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் கனடாவில் பிறந்து வளர்ந்த அல்லது இங்கே (கனடாவில்) நீண்டகாலமாக குடியேறி வந்து வாழ்ந்த பெண்களை திருமணம் செய்வது கிடையாது. பல ஆண்களும், சில பெண்களும் தங்கள் சொந்த நாட்டுக்குச் சென்று திருமணம் செய்து, பின்னர் கனேடிய குடிவரவு சட்ட திட்டங்களுக்கமைய தங்கள் துணையை இங்கே அழைத்துக்கொள்கிறார்கள்.

வாழ்க்கையின் ஆரம்ப நிலைகளில் எந்த குறை, நிறைகளும் கண்ணுக்கும், புத்திக்கும் பெரும்பாலும் எட்டுவதில்லை. மணிரத்தினம் படத்தில் வரும் "புது வெள்ளை மழை இஙகு பொழிகின்றது..." என்கிற வகையில் வாழ்க்கை இனிக்கும். குறிப்பாக திருமணத்துக்குப்பின் தான் உடலுறவு என்கிற ஒன்றையே உய்த்தும், துய்த்தும் அறியும் பெண்ணுக்கு அந்தக் கணங்கள் போலவே வாழ்க்கையின் அடுத்தடுத்த கட்டங்களும் இருக்கும், இருக்க வேண்டும் என்கிற விருப்பமும், ஆவலும் இருக்கும்.

ஆனால், "தேனிலவு கட்டம்" (Honeymoon Phase) முடிய கொஞ்சம் கொஞ்சமாய் கணவனின் சுயரூபம் தெரியவர சில பெண்கள் மொழியும், வாழ்க்கையும் புரியாத அந்நிய தேசத்தில் நிர்க்கதியாகி நிற்கத்தான் செய்கிறார்கள். பெண்கள் மீதான வன்முறைக்கு கனேடிய சட்டத்தில்





தண்டனை நிச்சயம், அதிலிருந்து தப்ப முடியாது என்று தெரிந்தாலும், தன் மனைவி தனக்கு இழைக்கப்படும் கொடுமையை வெளியே சொல்லமாட்டாள் என்கிற பெண்ணின் மடமைத்தனத்தை ஆண் தனக்கு சாதகமாக்கிக் கொள்கிறான். உடல், உள, பாலியல் ரீதியான வன்கொடுமைகளுக்கு மனைவி என்கிற பெயரில் பெண் பலியாக்கப்படுகிறாள். கணவன் எப்படி மனைவியை பாலியல் வன்முறை செய்ய முடியும் என்று சிலர் கேள்வி கேட்கக்கூடும். மனைவியே ஆனாலும் ஓர் பெண்ணின் சம்மதம் இல்லாமல் அவளை பாலியல் ரீதியாகக்கூட துன்புறுத்தக்கூடாது என்பதுதான் சட்டம்.

கனடாவே என்றாலும் பெண்கள் கணவன் என்கிற ஆண் மூலம் எப்படி கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்பது பற்றி நிறையவே சொல்லலாம். குடும்ப வன்முறை (Domestic Violence) என்பதால் ஆண்கள் பாதிக்கப்படுவதில்லையா என்று சிலர் விதண்டாவாதம் செய்யலாம். எத்தனையோ அறிக்கைகள், ஆய்வுகள், உண்மைக்கதைகளை கேட்டபின் தெரிந்துகொண்டேன்; குடும்ப வன்முறையில் பெண்களே மிக அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். வேண்டாத பெண்டாட்டி கைபட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம்.

சில கணவன்மார்களுக்கு மனைவியை ஒதுக்கி வைக்க காரணங்கள் தாராளமாகவே கிடைக்கிறது. கனேடிய சட்ட திட்டங்களுக்கு அமைய ஸ்பொன்சரில் ஒருவர் வாழ்க்கைத் துணையை அழைத்து வந்தால் குறைந்தது பத்து வருடங்களுக்கு அவரே தன் வாழ்க்கைத் துணைக்குத் தேவையான எல்லாச் செலவுகளையும் பொறுப்பேற்க வேண்டும். இல்லையென்றால் அதன் விளைவுகள் பாரதூரமாக இருக்கும். இது போன்ற, எங்கே தங்களை நாட்டுக்குத் திருப்பி அனுப்பிவிடுவார்களோ என்கிற பயம் ஒரு புறமும், தன் பிறந்த வீட்டை எப்படி சமாளிப்பது என்கிற கிலியிலுமே பல பெண்கள் தங்களுக்கு நடக்கும் கொடுமைகளை வெளியே சொல்வதில்லை.

சில பெண்கள் மனநோயாளிகளாகவும் ஆகியிருக்கிறார்கள் என்று பெண்கள் அமைப்புகள் சொல்கின்றன. இதன் காரணமாக குழந்தைகளை, குழந்தைகள் காப்பக அமைப்புகள் தங்கள் பொறுப்பில் எடுத்துக்கொள்கிறார்கள். எப்படியோ, கட்டிய கணவனின் கொடுமைகளை இனியும் பொறுக்க முடியாது என்கிற நிலை வரும் போது கணவனை விட்டு விலகிச் சென்று தங்கள் வாழ்க்கையை மீள கட்டியெழுப்ப நிறையவே சிரமப்பட்டு பலர் வெற்றியும் அடைகிறார்கள். கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் பெரும்பாலும்

பெண்களுக்குரிய தற்காலிக வதிவிடங்களில் (Shelters) தங்கவைக்கப்படுகிறார்கள். எதுவுமே இல்லாமல் பூச்சியத்திலிருந்து வாழ்க்கையை தொடங்குகிறார்கள். இந்த நாட்டில் இவ்வாறு பாதிக்கப்படும் பெண்களுக்கு உதவ, அவர்களின் வாழ்க்கையை மீளவும் அவர்களின் சொந்த முயற்சியிலேயே கட்டியெழுப்ப நிறையவே அரசின் திட்டங்கள் இருக்கின்றன. வாழ்க்கையில் எந்தப் பிரச்சனை வந்தாலும் பெண்கள் பெரும்பாலும் பிறந்த வீட்டை நோக்கியே ஓட நினைப்பார்கள். ஆனாலும், எல்லாப் பெண்களுக்கும் அந்த ஆதரவு கிடைக்குமா என்று தெரியவில்லை. ஒரு முக்கிய காரணம் பெண் கணவனைப் பிரிந்து வந்தால் அது பெரும்பாலும் பெண்ணின் பிழையாகவே பார்க்கப்படுகிற ஓர் குறைபாடு எம் சமூகத்தில் நிலவுகிறது. அதன் காரணமாகவே சில பெண்கள் இவ்வாறான பிரச்சனைகள் வரும்போது பிறந்த வீட்டை தவிர்க்கிறார்கள்.

தனிமனித சுதந்திரங்கள் பறிக்கப்படும் போது அது சார்ந்த சமூக கட்டமைப்பு அர்த்தமற்றதாகிப்போகிறது. கணவன் என்கிற உறவும், பெண்ணுக்கு விரோதமான சமூக அமைப்பும் பாதிக்கப்படும் பெண்ணுக்கு அபத்தமாய் தோன்றினால் அது அவர்கள் சமுதாயப் பிறழ்தல் ஆகவும் உருவாக காரணமாகிறது. அப்போது பாதிக்கப்படுவது அந்தப் பெண் மட்டுமல்ல அவளைச் சார்ந்து வாழும் குழந்தைகளும் தான்.

பெண்கள் கணவனைப் பிரிந்து வாழ்வது, விவாகரத்து கோருவது என்பது சமூகப் பிரச்சினையாய் மட்டும் பார்க்கப்படாமல், அது தனிமனிதப் பிரச்சனையாகவும் பார்க்கப்பட்டால் தான் அதற்குரிய தீர்வை எட்ட முடியும் என்பது என் கருத்து. தாலி என்கிற கலாச்சாரம் மற்றும் பண்பாடு என்கிற வேலிகள், தடைகளாக உருவெடுக்காமல் பெண்களும் சுதந்திரமாய் தங்கள் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்கும் சுதந்திரம், பெண்களுக்கு கல்வி, சுயமாய் முடிவெடுக்கும் திறன் மற்றும் தைரியம் என்பன வளர்த்தெடுக்கப்பட வேண்டும். அதேவேளை, பெண்ணுரிமைகள் அரசியல் ரீதியில் வென்றெடுக்கப்படவேண்டுமானால் அதற்குரிய பலம் வாய்ந்த அமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும். வெறும் தேர்தல் அரசியல் ஜனநாயக ஒற்றை வாக்கு என்கிற ஒன்று மட்டும் பெண்ணுரிமையை அரசியல் ரீதியாகப் பெற்றுக் கொடுக்காது. பலம் வாய்ந்த அமைப்புக்களாயும், அதனோடு தங்களை இணைத்துக்கொள்வதன் மூலமே பெண்கள் தங்கள் உரிமையை உறுதிப்படுத்தவும், பாதுகாக்கவும் முடியும்.

(நன்றி: வினவு)

***





# தமிழா உன் பெயர் தமிழா?

## பிறமொழிப்பெயர்களும் அதற்கு நேரான தமிழ்ப்பெயர்களும்

### மகளிர் பெயர்கள்

அம்பிகை - அம்மை
இரத்தினம் - செம்மணி
இராசாத்தி - அரசி
ஈசுவரி - இறைவி, செல்வி
கமலம் - தாமரை
கமலாசனி - அலர்மேல் மங்கை
கலியாணி - மங்கலவல்லி, மணவாட்டி
காந்திமதி - ஒளிநிலா
கோகிலம் - குயில்
கோமளம் - இளமை, அழகு
சங்கரி - உமை, இறைவி
சந்திரமதி - மதிமுகம்
சரசுவதி - கலைமகள், நாமகள்
சலசாட்சி - தாமரைக்கண்ணி
சுந்தரி - அழகி
ஞானம் - அறிவு
தருமாம்பாள் - அறவல்லி
தனலக்ஷ்மி - செல்வத்திருமகள்
திரிபுரசுந்தரி - முந்நகரழகி
தினகரசுந்தரி - கதிரழகி
பகவதி - இறைவி
பங்கஜம் - தாமரை
பத்மாவதி - பூமகள்
பரிபூரணி - நிறைசெல்வி
பருவதபுத்திரி - மலைமகள்
பார்வதி - உமை, மலைமகள்
புஷ்பாவதி - மலர்முகம்
மகாலக்ஷ்மி - பெருந்திருமகள்
மீனாட்சி - மீனக்கண்ணி
லக்ஷ்மி - திருமகள்

### ஆடவர் பெயர்கள்

அருணகிரி - அண்ணாமலை
ஆதித்தன் - பகலோன்
ஆனந்தம் - இன்பம்
இராசராசன் - மன்னர்மன்னன்
ஏகாம்பரன் - சிவபெருமான்
கணபதி - பிள்ளையார்
கணேசன் - ஆனைமுகன்
கந்தசாமி - முருகன்
கமலநாதன் - நான்முகன்
கருணாகரன் - அருளாளன்
கரணைப்பிரகாசம் - அருளொளி
கலியாணசுந்தரன் - மணவழகன்
கனகசபை - பொன்னம்பலம்
கிருஷ்ணன் - கண்ணன்
குஞ்சிதபாதம் - தூக்கிய திருவடி
கைலாசம் - சிவனுலகு
கோதண்டபாணி - விற்கையன்
சங்கரபாணி - திருமால்
சங்கரன் - நன்மையன், சிவன்
சச்சிதானந்தம் - உண்மையறிவின்பன்
சண்முகம் - ஆறுமுகம்
சதானந்தன் - நான்முகன்
சத்தியமூர்த்தி - மெய்யுரு
சந்திரசேகரன் - மதிசூடி, திங்களணிமுடியினன்
சந்தோஷநாதன் - மகிழ்நன்
சபாநாதன் - அம்பலவாணன்
சபாபதி - மன்றவாணன்
சரவணபவன் - முருகன்

இன்னும் வரும்...

**தொகுப்பு: திசையன்**

# "வரை" சந்தா விபரம்

*நீங்களும் இந்த அறிவியல் பல்சுவை மாசிகையின் சந்தாதாரராகுவதன் மூலம் எமது முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்க முடியும்.*

## உள்நாடு

*தனிப்பிரதி - ரூ.40*
*ஓராண்டுச் சந்தா - ரூ.480*
*2 ஆண்டுச் சந்தா - ரூ.950*
*3 ஆண்டுச் சந்தா - ரூ.1400*
*ஆயுள் சந்தா - ரூ.20,000.*

## வெளிநாடு

*ஆண்டு சந்தா* - 40 US$
*ஆயுள் சந்தா* - 400 US$

*முகவரி:*
*நிர்வாக ஆசிரியர்,*
*"வரை" வெளியீட்டகம்,*
*மகுடம் அசோசியேற்ஸ்,*
*இணுவில் சந்தி,*
*இணுவில்,*
*யாழ்ப்பாணம்.*

*சந்தா தொகையை, காசோலை மூலமாகவோ அல்லது எமது கணக்கில் பணத்தை வைப்பிலிட்டு ரசீதை அனுப்புவதன் மூலமாகவோ அல்லது காசுக் கட்டளை மூலமாகவோ (சுன்னாகம் தபால் நிலையத்தில் மாற்றக்கூடியதாக) எமக்குக் கிடைக்கச்செய்யலாம். வங்கி கணக்கு மூலம் அனுப்புபவர்கள்* R.Thananjeyan, Commercial Bank - Chunnakam. A/C No. 8107004995 **என்ற கணக்கிலிட்டு ரசீதை அனுப்பவும்.**

---


அறிவோம் ஆயிரம்

**வரை**

**நிர்வாக ஆசிரியர்:**
திரு. இ.தனஞ்சயன்
(0776 701661)

**ஆசிரியர்:**
திரு.சு.ஆழ்வாப்பிள்ளை

**இணை ஆசிரியர்கள்:**
திரு.இ.கிருபாகரன் (0717 884331)
செல்வி. மீரா இரவீந்திரகுமரன்

**இதழ் குழு:**
க. அன்பழகன் - 077 2092013, 077 9876937 (வவுனியா)
ஆ. பரமேஸ்வரன் - 0779791366 (மட்டக்களப்பு).
திரு.க.தர்மசேகரம்
திரு.வ.சசிகுமார்
செல்வி ஏ.பிறெண்டா
செல்வி ம. துளசிகா

**ஓவியம்:**
திரு.சு.ஆழ்வாப்பிள்ளை
செல்வன் தே. அகிலன்

இந்த அறிவியல் பல்சுவை மாசிகை "வரை" குழுமத்தினரால் மகுடம் அசோசியேற்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது. 021 224 1431

**காப்பாளர்கள்:**
***பேராசிரியர் ஏ.வி.மணிவாசகர்***
தலைவர், அரசியல் விஞ்ஞானத்துறை. யாழ். பல்கலைக்கழகம்.
***பேராசிரியர் ச.சத்தியசீலன்,***
பீடாதிபதி பட்டப்பின்படிப்புகள் பீடம். யாழ். பல்கலைக்கழகம்.
*பேராசிரியர். க.தேவராசா,*
பீடாதிபதி முகாமைத்துவ மற்றும் வணிக கற்கைகள் பீடம், யாழ். பல்கலைக்கழகம்
***பேராசிரியர் கு.மிகுந்தன்,***
தலைவர், விவசாய உயிரியல்துறை. விவசாய பீடம், யாழ். பல்கலைக்கழகம்.
***வைத்தியகலாநிதி திருமதி. தாரணி குருபரன்***
இரத்த வங்கி யாழ் போதனா வைத்தியசாலை.
***திருமதி. பகீரதி கணேசதுரை***
ஆசிரியை, யா/மகாஜனக் கல்லூரி
***திரு. சி.சந்திரன்***
உப அதிபர், சைவப்பிரகாச மகளிர் கல்லூரி வவுனியா T.P: 024 222 2281
***திருமதி. செம்மனச்செல்வி தேசிகன்***
உயர்தர ஆசிரியர், வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி வவுனியா T.P: 024 222 6062, 024 222 2425


PCST
PC SOLUTIONS
TECHNOLOGIES (PVT) LTD
305, Kasthuriyar Road, Jaffna.
Tel :- 021 222 1101
M.M.V Road, Nelliady
Tel :- 021 2264999
IBM
DELL
intel
AVG Anti-Virus
KASPERSKY lab
acer
bitdefender
secure your every bit
AVIRA
symantec
NOD32
GIGABYTE
EPSON
SAMSUNG
hp
D-Link
ViewSonic
Unbelievable Prices
intel pentium 4
ASUS